Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 09 வியாழக்கிழமை (21-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:88

# ஜெனரல் அனுருத்த கைது! அவருக்கு விளக்கமறியல்!!



## சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதி

கொழும்பு,பெப்ரவரி21

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ஜெனரல் அனுருத்த ரத்வத்தை நேற்றுமுன்தினம் இரவு இராஜகிரியவில் உள்ள அவரது இல்லத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். அவரை எதிர் வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.


எனினும் சுகவீனம் என அவர் தெரிவித்ததை அடுத்து நேற்று கொழும்பு தேசிய மருத்துவமனை யில் அவர் சேர்க்கப்பட்டார்.

கடந்த பொதுத் தேர்தல் தினத் தன்று கண்டி உடத்தலவின்னவில் வைத்து மடவளைப் பகுதியைச் சேர்ந்த 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அது தொடர்பாக கடந்த 9ஆம் திகதி அனுருத்த ரத்வத்தை, நான்காம் மாடி யில் குற்றப்புலனாய்வுப் பொலீஸா ருக்கு வாக்குமூலம் அளித்தார்.

அந்த வாக்குமூலத்தை ஆராய்ந்து பார்த்த பின்னர் அவரைக் கைது செய்வதற்கான ஆலோசனையை சட்டமா அதிபர் வழங்கியதாகக் கூறப் படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு இராஜகிரியவில் வைத்துக் கைது செய்யப்பட்ட ஜெனரல் ரத்வத்தை,

(12ஆம் பக்கம் பார்க்க)





முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை ஆஸ்பத்திரிக்குக் காரில் அழைத்துச் செல்லப்பட்ட போதும் நீதிமன்றத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டபோதும் எடுக்கப்பட்ட படங்கள்.

## கரிகாலன் - சுரேஷ் சந்திப்பு!

மட்டக்களப்பு,பெப்.21

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலனை ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையா டினார்.

மட்டக்களப்பில் நேற்று நடந்த 'பொங்குதமிழ்' நிகழ் வில் பங்குபற்றச் சென்ற சமயமே சுரேஷ் பிரேமச்சந் திரன் கரிகாலனைச் சந் தித்தார்.

கொக்கட்டிச்சோலையில் உள்ள புலிகளின் மாவட்ட செயலகத்தில் இந்தச் சந் திப்பு இடம்பெற்றது.



கரிகாலனும் சுரேஷும்

# மட்டக்களப்பில் 'பொங்கு தமிழ்'! வரலாறு காணாத எழுச்சி விழா!!

## பிரபாவின் படத்தைத் தாங்கியபடி பேரணியில் தலைவர்கள்

மட்டக்களப்பு,பெப்21

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தமிழ்ச் சமூகம் ஏற்பாடு செய்த 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வும், பேரணியும் மட்டக்களப்பு நகரில் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு; வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் தாயகம்; தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே! என்ற மூன்று விடயங்களையும் வலியுறுத்தி இந்த எழுச்சி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங் களைச் சேர்ந்த சுமார் 30 ஆயிரத்துக் கும் அதிகமானோர் இந்த எழுச்சி நிகழ் வுகளில் கலந்து கொண்டனர்.



ஈகச்சுடர் ஏற்றப்படும் காட்சி

மட்டக்களப்பு காந்தி சதுக்கம், ஊரணிச்சந்தி, கல்லடிச்சந்தி ஆகியவற்றில் இருந்து காலை 7மணிக்கு தனித்தனியாக ஆரம்பமான பேரணிகள் காலை 9 மணியளவில் மட்டக் களப்பு இந்துக் கல் லூரி மைதானத்தை வந்தடைந்தன.

பேரணியில் பங்கு கொண்ட தமிழர் கூட்டமைப்பு நாடா ளுமன்ற உறுப்பினர்களான என். இர விராஜ், ஜோசப் பரராஜசிங்கம் மற் றும் ஈ.பி.ஆர்.எல்.எவ. சுரேஷ் அணித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உருவப் படத்தைத், தாங்கிச் சென்றதைக் காணமுடிந்தது.

9.27 மணியளவில் ஈகச்சுடர் ஏற் றப்பட்டது. தொடர்ந்து கல்லூரியின் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பொதுக்கூட்டம் நடைபெற் றது. மலையக மக்கள் முன்னணித் தலைவரும், அமைச்சருமான பெ. சந்திரசேகரன், எம்.பிக்களான அ.சந் திரநேரு, கே.கிருஷ்ணபிள்ளை, என் இரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், எஸ்.தங்கவடிவேல் ஆகியோர் உட் பட பல பிரமுகர்கள் இந்தக் கூட்டத் தில் உரையாற்றினர்.

தொடர்ந்து 'பொங்கு தமிழ்' எழுச்சிப் பிரகடனம் வெளியிடப்பட் டது.

(12ஆம் பக்கம் பார்க்க)




எழுச்சி ஊர்வலத்தின் போது....



பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்



அகவணக்க நிகழ்வின்போது தலைவர்கள் என்.இரவிராஜ், சந்திர நேரு, ஜோசப் பரராஜசிங்கம், தங்கவடிவேல் முதலியோர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பாத யாத்திரைக்கு ஆதரவு தெரிவித்து ஆயர், மௌலவி, தேரர் ஆகியோர் செய்தி

யாழ்ப்பாணம்,பெப்.21

எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள சமாதான பாதயாத்திரைக்கு ஆதரவு வழங்குமாறு தென்னிந்தியத் திருச்சபை பேராயர் எஸ்.ஜெபநேசன், யாழ்.நாகவிகாராதிபதி ஞானரத்ன தேரர், யாழ். பள்ளிவாசல் மௌலவி எவ்.எம்.முஹிய்யத்தின் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்னிந்தியத் திருச்சபை பேராயர் எஸ்.ஜெபநேசன் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானப் பிரியர்கள் ஒழுங்கு செய்துள்ள பாதயாத்திரை இம்மாதம் 23ஆம்,24ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது என்று அறிந்து பேருவகையடைந்தேன்.

டிசெம்பர் 5ஆம் திகதிக்குப் பின் ஏற்பட்ட குதூகலமும் நன்நம்பிக்கையும் இப்பொழுது மங்கிவருவது வேதனைக்குரிய விடயமாகும். நிரந்தர சமாதானம் ஏற்படாத காரணத்தால் நமது பிரதேசம் மேலும்மேலும் வரட்சியடைந்துவருகின்றது.

ஆகவே மக்கள் அனைவரும் வெறும் பார்வையாளராக இருந்துவிடாமல் தமது பங்களிப்பினை உற்சாகமாகச் செய்தல் வேண்டும். இது அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடிக்கும் மக்களின் உரிமைக்குரல். இதில் அரசியல் நோக்கோ புகழ் ஈட்டலோ இல்லை. ஆகவே அனைத்து மக்களும் பக்திபூர்வமாக பாதயாத்திரையில் கலந்துகொள்வோம் - என்றுள்ளது.

நாகவிகாரையின் விகாராதிபதி விடுத்துள்ள செய்தி வருமாறு:-

சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு மற்றும் தென்பகுதி மக்களின் வாழ்வில் இயல்புநிலை ஏற்படவேண்டும். எனவே சமாதானத்தை ஏற்படுத்த அரசு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஸ்ரீலங்காவின் பிரஜைகள் என்ற வகையில் இந்த நாட்டு மக்கள் அனைவரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் சுதந்திரமாக நடமாடுவதற்கு உரித்துடையவர்கள். எனவே அதற்கான வழிவகைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பல வருடங்களாக இடம்பெயர்ந்து வசித்துவரும் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து தொழில்துறைகளில் ஈடுபடவேண்டும்.

எல்லா மதங்களும் சமாதானத்தை வலியுறுத்துகின்றன. பௌத்த சமயம் பொறுமையை ஊக்குவிக்கின்றது. எனவே மதங்களின் பெயரால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செய்யப்படவேண்டும். - என்றுள்ளது.

மௌலவி எவ்.எம்.முஹிய்யத்தீன் தமது செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

சமாதானம் மனித ஜீவன்களை வாழவைக்கவென இந்த உலகுக்கு இறைவன் வழங்கிய மிகப்பெரிய செல்வம் அருட்கொடை. இன்று நாம் அதைத்தொலைத்துவிட்டோம். எமது மக்களிடமிருந்து அது பறிக்கப்பட்டு இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்டன. இதனால் சொல்ல முடியாத துயரங்களை முழுநாடுமே அனுபவித்தாகிவிட்டது.

வறுமை, இடம்பெயர்வு, சொந்த மண்ணிலேயே அகதி வாழ்க்கை, உயிர் - உடைமைகள் இழப்பு, கலாசாரச் சீரழிவுகள்.... இப்படி மக்கள் படும் துன்ப துயரங்கள் ஏராளம்.

இன்று அனைத்து சமூக, இன மக்களின் தேடலும் தேவையும் சமாதானமே ஆகும். புதியதோர் நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் முன்னெடுக்கப்பட்டுள்ள சமாதானத்திற்கான முயற்சிகள் வீண்போகா. எப்பாடுபட்டாயினும் சமாதானம் கொண்டுவரப்படவேண்டும். பரஸ்பர புரிந்துணர்வுடன் சகல இனங்களினதும் சமூகங்களினதும் உரிமைகள், எதிர்பார்ப்புகள் முழுவதுமாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட நிலையில் எமது தேசம் புதியதொரு பொலிவுடன் கட்டியெழுப்பப்படவேண்டும்.

தப்பெண்ணங்கள், மனக் கசப்புகளும் நீக்கப்பட்டு பேச்சு மூலம் எமது மக்களுடைய அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

மனிதநேய அமைப்புகளின் அனுசரணையுடன் சர்வமதத்தினராலும் நடத்தப்படும் சமாதானத்திற்கான இந்தப் பாதயாத்திரை மூலம் விடுக்கப்படும் உயரிய செய்தி - வேண்டுகோள் - இதுவாகும்.

சர்வமதத்தவரின் இந்தப் பாதயாத்திரையின் நோக்கம் வெற்றிபெற அல்லாஹ்வின் ஆசியை வேண்டுவோம். சமாதானத்தை நேசிப்பவர்கள், அதனை உருவாக்க உழைப்பவர்கள் பாக்கியசாலிகள். அருளாளன் அல்லாஹ் இத்தகையோரை ஆசர்வதிப்பானாக! சமாதானத்திற்கான எம் அனைவரது எதிர்பார்ப்பும் வெற்றிபெற ஆசீர்வதிப்பானாக! - என்றுள்ளது. (உ-3)

# புற்றுநோய்ச் சிகிச்சைக்கு டாக்டர் குழு யாழ். வரும்

புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள் குழு ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது. புற்றுநோய் வைத்திய நிபுணர் பாலவர்த்தன தலைமையில் வரும் இந்தக் குழுவில் ஆறு டாக்டர்களும் இரண்டு தாதிகளும் இடம்பெற்றுள்ளனர்.

இரு தினங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து நோயாளர்களுக்கு இக்குழுவினர் பரிசோதனைகளை மேற்கொள்வர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணரத்தினவும் இக்குழுவுடன் வருகின்றார்.

இக்குழுவினர் இங்கு விஜயம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லால் விஜேசூரியா மேற்கொண்டுள்ளார். (உ-3)

# அதிதிகள் உரை இன்று

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் அதிதிகள் உரை நிகழ்வு இன்று மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் சிவகுருநாதர் ஒழுங்கையிலுள்ள 12ஆம் இலக்க இல்லத்தில் இடம்பெறும்.

கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் றோட்டேரியன் ஜானக எதிரிசிங்க 'றோட்டறி ஊடாகச் சமாதானம்' என்ற தலைப்பிலும், குருநாகல் றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் றோட்டேரியன் மார்ட்டின் டீ சில்வா 'சமூகசேவை' என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்துவர்.

ஆர்வலர்கள் அனைவரும் இந்நிகழ்வில் பங்குகொள்ளலாம். றோட்டறிக் கழகம் மற்றும் றோட்டறக்ட் கழகங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றுமாறு யாழ்.றோட்டறிக் கழகம் கோரியுள்ளது. (உ)

## கூ.மொ.வியில் 550 ஊழியருக்கு கல்தா!

கொழும்பு,பெப்.21

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் (சதொச) தற்காலிக ஊழியர்களாகக் கடமையாற்றி வரும் சுமார் 550 ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படவுள்ளனர்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் நியமனம் செய்யப்பட்ட இந்த ஊழியர்கள் ஒரு மாத முன்னறிவித்தலின் பின்னர் நீக்கப்படுவர் எனக் கூறப்பட்டது. (உ-7)

# இரு தினங்கள் கலாசார விழா

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலாசார விழா நாளைமறுதினம் சனிக்கிழமையும், மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நல்லூர் இளங்கலைஞர் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரு தினங்களும் பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நடைபெறும்.

முதலாம் நாள் நிகழ்வுகளில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். வில்லிசை, வேணுகான இசை, இலக்கிய நாடகம், கலைஞர் கௌரவிப்பு என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகளில் யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும் யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். கர்நாடக இசை, நிருத்தியாஞ்சலி நாடகம், இசைநாடகம் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (உ-7)

## உதவி கோருகிறார் கேணல் ஹமீம்

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் மூன்றரை வருடங்கள் சிவில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி தற்சமயம் ஓய்வுபெற்றுள்ள கேணல் ரி.எம்.எஸ்.ஹமீம் இருதய நோயால் பீடிக்கப்பட்டுள்ளார்.

இருதய நோய் சத்திரசிகிச்சைக்கு அவர் உட்பட வேண்டும் என்று வைத்தியர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

இந்த சத்திர சிகிச்சைக்கு சுமார் மூன்றரை லட்சம் ரூபா தேவைப்படுவதால் அதில் கணிசமான தொகையை பொதுமக்களிடம் இருந்து நன்கொடையாகப்பெற அவர் விரும்புகிறார்.

உதவிசெய்ய விரும்புபவர்கள் சம்பத் வங்கி, நகரக் கிளையில் உள்ள தனது வங்கிக் கணக்கு இலக்கம் 100155079627. உதவிகளை அனுப்புமாறு அவர் கேட்டுள்ளார். (உ)

# சமாதானத்துக்கு வலுச்சேர்க்கும் மக்கள் போராட்டங்கள் தேவை

## யாழ்.பல்கலை மாணவர்கள் அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.21

சமாதான முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் மக்கள் போராட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

சமாதானத்தை வலியுறுத்தி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படவுள்ள பாதயாத்திரைக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகத் தொடரும் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்படவேண்டும்.

புதிதாகப் பதவியேற்றுள்ள அரசும் விடுதலைப் புலிகளும் இதற்காக சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் ஜே.வி.பி. முதலிய சில பேரினவாத சக்திகள் இத்தகைய சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கில் செயற்பட்டு வருகின்றன. இந்தவேளையிலேயே சமாதானத்தை வற்புறுத்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, அவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தவேண்டும் எனக் கோரி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாத யாத்திரையில் சகல பல்கலைக்கழக மாணவர்களும் ஏனைய மாணவர்களும் கலந்துகொண்டு தமது ஆதரவினை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-7)

## சமாதானப் பாதயாத்திரையை ஒட்டி

# தனியார் கல்வி நிறுவனங்களை சனி, ஞாயிறு மூடக் கோரிக்கை

எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் இடம்பெறும் சமாதானப் பாதயாத்திரையை ஒட்டி அன்றைய தினங்களில் தனியார் கல்வி நிறுவனங்களை மூடி, இந்தப் பாதயாத்திரை வெற்றிபெற ஒத்துழைக்கும்படி யாழ் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் கோரியுள்ளது.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் இந்தப் பாதயாத்திரையில் பங்குகொள்ள வசதியாக அத்தினங்களில் ஏற்பாடு செய்த விளையாட்டுப்போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ரத்துச் செய்யும்படி ஒன்றியம் கேட்டுள்ளது. சமாதான பாதயாத்திரையில் பங்குபற்றும் நிறுவனங்களும் மற்றும் இந்த நிகழ்வுக்கு ஒத்துழைப்பு நல்கிவரும் ஏனைய நிறுவனங்களும் மேலதிக விவரங்கள் தேவைப்படின் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

# சாயி சிந்தனை



## மிருகங்களின் அன்புப் பகிர்வு மனிதர்களிடம் இல்லையே!

பூவினுள் இருக்கும் தேனை அது மலர்ந்த கொடி அனுபவிப்பதில்லை. பழங்களினுள் இருக்கும் இனிய சுவை மிகுந்தசாறு, அது பழுத்த மரத்தினால் அனுபவிக்கப்படுவதில்லை.

இவ்வுலகில் எல்லாமே தியாகம்தான். நதியில் ஓடும் நீரை நதி தானே குடிப்பதில்லை. அந்த நீர் மக்களின் தேவைக்கே பயன்படுகிறது.

மரங்களில் பழுக்கும் பழங்கள் மற்றவருக்குத்தானேயன்றி அந்த மரங்களுக்காக இல்லை.

பசுக்கள் தங்கள் மடியிலிருக்கும் பாலை மற்றவருக்காகத் தியாகம் செய்கின்றனவே தவிர தானே குடிப்பதில்லை. அதுபோல மனிதன் தன்னுள் இருக்கும் தெய்வீகத்தை குறைந்தது பத்துப் பேருடனாவது பகிர்ந்து கொள்ளவேண்டும்.

ஆனால் இன்று மனிதன் சுயநலத்தினாலும் சுயலாப நோக்கினாலும் காலம் கடத்துகிறான். மிருகங்கள் கூட தன்னைச் சேர்ந்தவர்களிடம் அன்பைப் பகிர்ந்து கொள்கின்றன. ஆனால் மனிதனிடம் அத்தகைய விரிந்த, பரந்த மனப்போக்குக் காணப்படுவதில்லை. குறுகிய எண்ணங்கள் பெருகிவிட்டன. எல்லா விஷயத்திலும் சுயநலமே முன்னிற்கிறது.

சுயநலத்தின் ஆதிக்கத்தால் மனிதன் பைத்தியம் பிடித்து அலைகிறான். என்ன படித்தாலும் நல்ல குணம் இல்லை. பல அறிவாளிகள், நோபல் பரிசு வாங்கியவர்கள் எல்லாம் இருந்தார்கள். அவர்கள் பெயர்களை இன்று மறந்துவிட்டார்கள். ஆனால் ஆன்மீகத்தில் உயர்ந்தவர்கள் ராமகிருஷ்ண பரமஹம்சர், ராமதாசர், கபீர்தாஸ், விவேகானந்தர் இவர்கள் எல்லாம் புத்தகத்தில் மட்டுமல்ல மனிதனின் இதயங்களிலும் நிலைபெற்றிருக்கின்றனர்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.21

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க வைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடத்தில் இயங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோரை இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அதிபர் கேட்டுள்ளார். (உ-7)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.21

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது ஆசிரியர்களுக்கான இம்மாதச் சம்பளமும் வழங்கப்படும் என்று பிரதி அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-3)

# மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.21

மிருசுவில் அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வா.சடாச்சரம் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) கு.பிரேமகாந்தனும், சிறப்பு விருந்தினர்களாக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) க.குமாரசாமி, யாழ்.கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்வர். (க-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.21

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் சு.யோகராசா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்புத்துறை புனித சவேரியர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்திரு. மனுவேற்பிள்ளை டேவிட் கலந்துகொள்வார். (க-ரி)

★ ★ ★

கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை அதிபர் மா.து.பாலசுந்தரம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி கல்விக் கோட்ட அலுவலர் நா.சத்தியநாதனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமியும் கலந்துகொள்வர். (க-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.21

நெடுந்தீவு மேற்கு மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் நெடுந்தீவு கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.அரசரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி ப.அரசரட்ணம் பரிசில்களை வழங்குவார். (உ-7)

## நடமாடும் செயலக சேவை

வலி.வடக்குப் பிரதேச செயலகம் நடத்தும் நடமாடும் செயலக சேவை இன்று காலை 9 மணி முதல் இளவாலை ஒல்லுடை நுண்மதி பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அரசின் நூறுநாள் கருத்திட்டத்தை செயற்படுத்தும் முகமாக இந்த சேவை இடம்பெறவுள்ளது. (உ-7)

## திருத்தம்

நேற்றைய உதயனின் 11ஆம் பக்கத்தில் வெளியான வண்ணை நாவலர் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா தொடர்பான படங்களின் விளக்கக் குறிப்பில் முதற்பிரதி பெறுபவர் *யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம்* என்பதற்குப் பதிலாக, திருமதி செ.பத்மநாதன் எனத் தவறுதலாகப் பிரசுரமாகி விட்டது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

# எகிப்தில் ஓடிக்கொண்டிருந்த ரயிலில் தீ; முந்நூறுக்கும் மேற்பட்டோர் கருகிப் பலி!

## ஆண்டிப்பட்டியில் இன்று வாக்குப்பதிவு

தமிழகத்தின் ஆண்டிப்பட்டித் தொகுதியில் இன்று இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதா போட்டியிடுவதால் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட இத்தேர்தலை ஒத்திப்போடுமாறு தி.மு.க. தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்று இந்திய உயர் நீதிமன்றம் நிராகரித்தது குறிப்பிடத்தக்கது.(ஒ)

## ஹஜ் பெருநாளை கொண்டாடுவதற்கு சென்றவர்களுக்கு ஏற்பட்ட அவலம்

கெய்ரோ,பெப்ரவரி21

**எகிப்தியத் தலைநகர் கெய்ரோவின் தெற்குப் பகுதியில் நேற்று ஓடிக்கொண்டிருந்த பயணிகள் ரயில் ஒன்று திடீரென்று தீப்பிடித்து எரிந்ததில் முந்நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் என்று கூறப்படுகிறது.**

கெய்ரோவில் இருந்து வட எகிப்திய நகரான லக்ஸருக்கு சென்றுகொண்டிருந்த பயணிகள் விரைவு ரயிலே திப்பற்றி எரிந்தது. ரயிலின் 11 பெட்டிகளில் 10 பெட்டிகள் தீயில் எரிந்துள்ளன. வேகமாகச் சென்ற ரயில் தீப்பற்றிய பின்னரும் சுமார் 6 கிலோ மீற்றர்கள் ஓடியபிறகே நிறுத்தப்பட்டது.

இதனால் தீயில் கருகி இறந்தவர்களைத் தவிர, பலர் ஓடும் ரயிலில் இருந்து உயிர் தப்ப குதித்து படுகாயமடைந்து இறந்துள்ளனர்.

ஹஜ் பெருநாளை முன்னிட்டு தமது சொந்த ஊர்களுக்கு தலைநகரில் இருந்து புறப்பட்டு சென்றவர்களின் கூட்டத்தால் ரயில் பெட்டிகள் நிரம்பியிருந்ததாகவும் -

150 பேர் பயணம் செய்யக்கூடிய அந்த ரயிலில் சுமார் 350 பேர் பயணித்ததாகவும் - கூறப்படுகிறது.

தீப்பிடித்ததற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. மின்சாரக் கோளாறு அல்லது, உணவைச் சூடாக்குவதற்காக ரயிலில் மூட்டப்பட்ட சிறு எரிவாயு அடுப்பு வெடித்தமை தீக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. எகிப்தில் நீண்டதூர ரயில்களில் காஸ் அடுப்புகளில் பயணிகள் சமைப்பது வழக்கம் என்றும்-

இறந்தவர்கள் அனைவரும் எகிப்தியர்கள் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையில் பொலீஸாரும், தீயணைப்புப் படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஒ)



எகிப்தில் தீப்பற்றி எரிந்த ரயிலின் பெட்டிகளில் சிலவற்றைப் படத்தில் காணலாம்.

## ஹஜ் கடமையை நிறைவேற்ற 20 லட்சம் முஸ்லிம்கள் மக்காவில் திரண்டனர்

மக்கா,பெப்.21

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக சுமார் இருபது லட்சம் இஸ்லாமியர்கள் சவூதி அரேபியாவின் மக்கா நகரில் கூடியுள்ளனர்.

இறைநம்பிக்கை (ஈமான்) தொழுகை, நோன்பு, தானம் (ஜகாத்), ஹஜ் யாத்திரை ஆகிய 5 கடமைகள் இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. இவற்றில் இறுதிக் கடமையாகிய ஹஜ் கடமையை நிறைவேற்ற உலகின் பல பகுதிகளில் இருந்தும் சென்றுள்ள இஸ்லாமியர்கள் அரபாத் மைதானத்தில் நேற்று பிரார்த்தனை நடத்தித் தமது ஹஜ் கடமைகளை ஆரம்பித்தனர். இறுதியாகப் பலி கொடுப்பதற்கு சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் மக்காவின் புறநகர்ப்பகுதியில் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

இறைவனின் கட்டளையை ஏற்றுத் தனது மகன் இஸ்மாயிலை பலியிடுவதற்கு தயாரானபோது அவரது தியாகத்தை மெச்சிய இறைவன் மகனுக்குப் பதிலாக ஆடு ஒன்றைப் பலி கொடுக்கச் செய்தார். இதன் படியே ஹஜ்யாத்திரையின் முடிவில் 'குர்பானி' எனப்படும் பலி கொடுக்கப்படுகிறது. (ஒ-6)

## சிம்பாப்வே மீது கடும்தடைகள் ஐரோப்பிய ஒன்றியம் விதித்தது

ஹராரே,பெப்.21

சிம்பாப்வே மீது ஐரோப்பிய ஒன்றியம் கடுமையான தடைகளை விதித்துள்ளது. அதிபர் ரொபேர்ட் முகாபேயும், அவருக்கு நெருக்கமானவர்கள் என்று கூறப்படும் 19 பேரும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் பிரவேசிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.



ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஹராரே விமான நிலையத்தில்.

சிம்பாப்வேயில் இடம்பெறவுள்ள அதிபர் பதவிக்கான தேர்தலை கண்காணிக்க அனுப்பப்பட்ட ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்பாளர்களை அவர்களது கடமைகளைச் செய்ய விடாது அதிபர் முகாபேயும், அவரது அரச அதிகாரிகளும் தடுத்ததாகவும் -

அதனால் தமது கண்காணிப்பாளர்கள் சிம்பாப்வேயை விட்டு வெளியேறிவருவதாகவும் -

முன்னதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்திருந்தது.

வெள்ளையர்களுக்கு எதிரான கடும் போக்கை கடைப்பிடித்துவரும் அதிபர் முகாபேயை பதவியை விட்டு அகற்ற பிரிட்டன் சூழ்ச்சி செய்து வருவதாக முகாபே தரப்பு குற்றஞ்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அரசு தரப்பின் முதல்சாட்சியை மிலோசெவிக் குறுக்குவிசாரணை

ஹேக்,பெப்.21

போர்க் குற்றங்களுக்கான சர்வதேச நீதிமன்றத்தின் வழக்கை எதிர்நோக்கியுள்ள யூகோஸ்லாவிய முன்னாள் அதிபர் சொலபொடான் மிலோசெவிக் நேற்றுமுன்தினம் அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தார்.

இரண்டாம் உலகப் போர் தொடர்பான நியுரெம்பேர்க் வழக்கின் பின்னர் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள யுத்தக்குற்றம் தொடர்பான இந்த வழக்கில் 350 பேர் அரசு தரப்பு சாட்சிகளாக உள்ளனர். அவர்களில் முன்னாள் கம்யூனிஸ தலைவரான மஹ்மட் பஹ்ஹலி குறுக்கு விசாரணைக்கு முதலில் அழைக்கப்பட்டார்.

தன்மீதான வழக்கில் தனக்காகத் தானே வாதிட்டுவரும் மிலோசெவிக நேற்றுமுன்தினம் பஹ்ஹலியை விசாரிக்க ஆரம்பித்தார்.

பொஸ்னியா, குரோஷியா, கொசோவா ஆகிய இடங்களில் செர்பியர்கள் மற்றும் யூகோஸ்லாவியப்படையினருக்கு ஆதரவளித்து இன ஒழிப்பு படுகொலைகள், மனித உரிமைக்கு எதிரான குற்றங்கள், ஜெனவா ஒப்பந்தம் மற்றும் யுத்தகால விதியை மீறிய செயல்கள் ஆகியவற்றில் ஈடுபட்டதாக மிலோசெவிக் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தின் முன்பாக நிறுத்தப்பட்ட முதலாவது முன்னாள் அதிபர் மிலோசெவிக் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

## இந்திய மரபுவழி அறிவியலுக்கு காப்புரிமை பெற நடவடிக்கை

புதுடில்லி,பெப்.21

இந்தியரின் மரபுவழி அறிவியலுக்கு காப்புரிமை பெறும் முயற்சியில் இந்திய விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியாவில் ஆண்டாண்டு காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த சில பழக்கவழக்கங்களும், பயன்படுத்தப்பட்ட பொருள்களும் விஞ்ஞானரீதியாகப் புதிய தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்டு, அவற்றுக்கு சர்வதேச காப்புரிமையைப் பெற்றுவிட இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கையாக இது அமைகின்றது.

பழங்கால நம்பிக்கைகளையும் நவீன விஞ்ஞானத்தையும் இணைதது மரபுகளைப் பாதுகாக்கவே தாம் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக புதுடில்லி விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திக் குழுவின் இயக்குநர் டாக்டர் ரகுநாத் மஷெல்கார் தெரிவித்தார்.

பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் பல்வேறு சமூகங்களால் வளர்க்கப்பட்ட மரபுவழி அறிவியலுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் காப்புரிமை பெற்றுவிடுவதைத் தடுப்பதற்காக இந்தத் துரித முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

நீண்ட காலமாக மஞ்சளை மருத்துவத் தேவைகளுக்காக இந்தியர் பயன்படுத்திவருகின்றனர். ஆனால் மஞ்சளை ஆய்வகச் சோதனை செய்து, அதிலுள்ள இரசாயன மூலக்கூறுகளைக் கண்டுபிடித்ததன் மூலம் மஞ்சளுக்கான காப்புரிமையை அமெரிக்க நிறுவனம் ஒன்று பெற்றுக் கொண்டது. தற்போது மஞ்சளில் இருந்து மருந்துப் பொருள்களைத் தயாரிக்க இந்திய நிறுவனங்கள் குறிப்பிட்ட அமெரிக்க நிறுவனத்திடம் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதேபோல் காலங்காலமாக இமய மலைப் பகுதியில் விளைவிக்கப்படும் 'பாஸ்மதி' அரிசிக்கு மற்றொரு அமெரிக்க நிறுவனம் காப்புரிமை பெற்றுக் கொண்டது.

இதே நிலைமை மற்றைய இந்திய மரபுக்களுக்கும் வந்துவிடக்கூடா தென்பதில் இந்திய அரசு அதிக கவனம் எடுத்துள்ளது.

இந்தியாவில் பல தலைமுறைகளாகக் கடைப்பிடிக்கப்படும் பழக்க வழக்கங்களை சேகரித்து ஆவணப்படுத்தும் திட்டம் ஒன்றும் செயற்படுத்தப்படவுள்ளது. (ஒ)

உலக அரங்கில்

### தாய்லாந்தில் சிங்கப்பூர் பிரதமருக்கு 'கட்டில் பிரச்சினை'

பாங்கொக்,பெப்.21

தாய்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிங்கப்பூர் பிரதமர் கோ சோக் ஜாவ் அங்கு 'கட்டில் பிரச்சினை'யை எதிர்கொண்டுள்ளார்.

6 அடி 4 அங்குலம் உயரமான ஜாவ் தங்கியுள்ள தாய்லாந்தின் உயர்தர ஹோட்டலில் அவரது உயரத்துக்கு ஏற்ற கட்டில் உட்பட தளபாடங்கள் இல்லாததால் சங்கடங்களை எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

### அதிக நேரம் உறங்கினால் ஆயுட் காலம் குறையும்: ஆய்வாளர்கள் தெரிவிப்பு

வாஷிங்ரன்,பெப்.21

அளவுக்கு அதிகமாக உறங்குபவர்களின் ஆயுட் காலம் 15 சதவீதம் குறைவதாக அமெரிக்க புற்றுநோய் நிறுவன ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு நாளில் 7 மணித்தியாலங்கள் உறங்குபவர்கள் நீண்டகாலம் உயிர் வாழ்வதாக அவர்கள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.(ஒ)

### இந்திய மாநிலங்களில் 'பிளேக்' நோய் பரவுகிறது

இந்தியாவின் இமாசலப் பிரதேசம், உத்திராஞ்சல் மாநிலங்களில் 'பிளேக்' நோய் பரவிவருவதாகக் கூறப்படுகிறது. இந்த நோய் மற்றைய இடங்களுக்குப் பரவாமல் தடுக்கப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதுவரை 'பிளேக்' நோய்க்கு மூவர் பலியாகியுள்ளனர். மேலும் 14பேர் இந்த நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் வான், கடல் வழித் தாக்கு; 15 பலஸ்தீன அதிகாரிகள் மரணம்!

ஜெருசலேம்,பெப்.21

காஸா மற்றும் மேற்குக்கரைப் பகுதிகளில் இஸ்ரேல் நேற்று மேற்கொண்ட வான், கடல் வழித்தாக்குதலில் 15 பலஸ்தீனப் பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலிய இராணுவத்தினர் ஆறுபேர் பலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டதற்கு பழிவாங்கவே இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் காஸா நகரத் தலைமையகக் கட்டடம் தகர்க்கப்பட்டதாகவும் -

அரபாத்தின் மெய்ப்பாதுகாவலர் படைப் பிரிவைச் சேர்ந்த 4 பேர் இதில் கொல்லப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

பலஸ்தீனர்களை இராணுவ நடவடிக்கைகள் மூலம் அடக்கிவிட இஸ்ரேலியப் பிரதமர் மேற்கொண்ட முயற்சிகள் இதுவரை வெற்றியளிக்கவில்லை இதனால் எதிர்க்கட்சிகளின் கண்டன அழுத்தத்துக்கு அவர் இலக்காகியுள்ளார்.

பலஸ்தீன தீவிரவாதிகளை கட்டுப்படுத்த அரபாத்துக்கு அழுத்தங்கள் அதிகரித்த நிலையில் தற்போது இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுக்கும் பலஸ்தீனர் மீதான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன.

இதனால் கடந்த 16 மாதங்களாக இடம்பெற்றுவரும் பலஸ்தீன - இஸ்ரேலிய வன்முறைகள் முடிவுக்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

## ஆப்கான் சூட்டுச்சம்பவம் குறித்து வெளிவரும் முரண்பட்ட தகவல்

காபூல்,பெப்.21

ஆப்கானிஸ்தானில் கர்ப்பிணிப் பெண்ணை மருத்துவமனைக்கு காரில் கூட்டிச் சென்றவர்கள் மீது அமைதி காக்கும் படையைச் சேர்ந்த பிரிட்டிஷ் வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பாக ஆப்கான் பொலீஸும் பிரிட்டிஷ் இராணுவமும் முரண்பட்ட தகவல்களை வெளியிட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கார் வந்த திசையிலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் -

அதனாலேயே பிரிட்டிஷ் வீரர்கள் அந்தத் திசைநோக்கிச் சுட்டதாகவும்- பிரிட்டிஷ் இராணுவம் கூறுகின்றது.

ஆனால் இதனை ஆப்கான் பொலீஸார் மறுத்துள்ளனர். சம்பவ இடமருகே பணியில் ஈடுபட்டிருந்த ஆப்கான் பொலீஸார், பிரிட்டிஷ் வீரர்களின் துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்துக்கு முன்பாக தாம் வேறு சூட்டுச சத்தத்தை கேட்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பெயர் குறிப்பிட விரும்பாத ஆப்கான் அதிகாரி ஒருவர் கூறுகையில் -

தமது வீரர்களைக் காப்பாற்றுவதில் அமைதிகாக்கும் படை அதிகாரிகள் குறியாக நிற்பதாகவும் -

அச்சம் காரணமாக கார்மீது சுட்ட பிரிட்டிஷ் படை வீரர்களை தப்புவிக்க உண்மையை மறைக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் -

தெரிவித்தார். (ஒ-6)

# கொழும்புத்துறை மேற்குப் பகுதியில் மீளக்குடியமர நேற்றுமுதல் அனுமதி

அரியாலை,பெப்.21

கொழும்புத்துறை மேற்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு நேற்று புதன்கிழமை முதல் இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கொழும்புத்துறை கனகர் சந்தியில் அமைந்திருக்கும் சிவில் நிர்வாக அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற மீளக்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடலில் அப்பகுதி இராணுவ அதிகாரியினால் மக்கள் மீளக்குடியமர்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

ஆனந்தன்வடலி வீதியில் இருந்து துண்டி வீதியை உள்ளிட்ட வளன்புரம், இலந்தைக்குளம் வீதி, சுவாமியார் வீதி, விபுலானந்தர் வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நேற்றுத் தொடக்கம் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை கிழக்கு, நெடுங்குளம் ஆகிய பகுதிகளில் கண்ணிகள் மற்றும் மிதிவெடிகள் அகற்றும் பணி இடம்பெற்று வருவதாகவும் - அவை அகற்றப்பட்டு முடிந்ததும் குறைந்தது ஒரு மாத காலத்தில் அப்பகுதியிலும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

அந்த இராணுவ அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சுவாமியார் வீதி, விபுலானந்தர் வீதிகளில் போடப்பட்டிருந்த தடைகள் அகற்றப்பட்டு நேற்றுமுதல் இவ்வீதிகளினூடாக மக்கள் பயணம் செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ம-17)

# திருமலை துறைமுகப் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த வேண்டும்

## லண்டன் 'லொயிட்ஸ்' பிரதிநிதி சிபார்சு

கொழும்பு,பெப்.21

திருகோணமலைத் துறைமுகப் பாதுகாப்பை மேம்படுத்த சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என இலங்கை வந்த லண்டன் 'லொயிட்ஸ்' கம்பனி பிரதிநிதி சிபார்சு செய்துள்ளார்.

அதை அடுத்து திருகோணமலை துறைமுகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன முடிவெடுத்துள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதலை அடுத்து அரசு கொழும்புத் துறைமுகத்துக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கியுள்ளது.

ஆனால் திருமலைத் துறைமுகத்துக்கு அவ்வாறு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படவில்லை. அதனாலேயே பிறிமா ஆலைக்கு கோதுமை மாவை ஏற்றி இறக்கும் கப்பல்கள் ஏனைய சில வர்த்தகக் கப்பல்கள் அங்கு தரித்து நிற்கத் தயக்கம் காட்டுகின்றன. திருமலைத்துறைமுகத்துக்கான பாதுகாப்பு பற்றிய சிபார்சுகள் பரிசீலணை செய்யப்படும் என்றும் அமைச்சர் 'லொயிட்ஸ்' நிறுவனத்திடம் உத்தரவாதம் அளித்துள்ளார்.

லண்டனில் இயங்கும் பிரபல காப்புறுதி நிறுவனமான 'லொயிட்ஸ்' இலங்கை வரும் கப்பல்களுக்கு காப்புறுதி செய்வதற்கு கட்டணங்களை அதிகரித்திருந்ததும் -

இதன் காரணமாக கப்பல்கள் இலங்கை வரப் பின்னடித்ததும் -

இலங்கை அரசு அந்த நிறுவனத்துடன் பல தடவைகள் பேச்சுகள் நடத்தி, கட்டணத்தைக் குறைத்ததும் - தெரிந்தவையே. (க-3)

## நடேஸ்வரா மாணவருக்கு அன்பளிப்பு!

யாழ்ப்பாணம், பெப்.21

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் கல்விகற்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கல்லூரியின் லண்டன பழைய மாணவர் சங்கத்தினால், நாளை வெள்ளிக்கிழமை ஒரு தொகுதி பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

நாளை காலை 10மணிக்கு கல்லூரியில் இடம்பெறும் இந்நிகழ்வில் லண்டனில் இருந்து வருகைதந்துள்ள லண்டன் பழையமாணவர் சங்கத்தின் செயலாளர் ரகு இந்தப் பொருள்களை மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்குவார். யாழ்ப்பாணத்திலுள்ள பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்வர்.

(ம)

## கைதடி நுணாவில் சந்திக்கு அருகில் சங்கக் கடை!

தென்மராட்சி,பெப்.21

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கைதடி நுணாவில் வைரவர் கோயிலடியில் புதிய கிளைக் கடை கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைதடி நுணாவில், மட்டுவில் தெற்கு, நுணாவில் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து இக்கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

சங்கத்தினால் ஏற்கனவே மீசாலை புத்தூர் சந்தி, மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் ஆகிய இடங்களில் கிளைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-117)

## நகரில் நேற்று நடந்த விபத்தில் பஸ்ஸுக்குச் சேதம்

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.கஸ்தூரியார் வீதி - நாவலர் வீதிச்சந்தியில் நேற்று பிற்பகல் இராணுவத்தினரின் எண்ணெய் பவுஸரும் போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்றும் விபத்துக்குள்ளாகின.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்துறை நோக்கிச் சென்ற பஸ்ஸும் நாவலர் வீதியால் வந்து கொண்டிருந்த பவுஸருமே விபத்தில் சிக்கின.

இந்த விபத்தின்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும் பஸ் ஓரளவு சேதமடைந்தது. இந்த விபத்து தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்து ஏற்பட்ட இடத்தில் பொலஸார் வந்து பார்வையிடும்வரை இந்த வீதி ஊடான போக்குவரத்தும் சுமார் அரை மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

(க-6)


**SRI VENGADA GEM'S & JEWELLERY**

தரமான (ISO) நிர்ணயிக்கப்பட்ட கற்களை இலங்கை எங்கும் விநியோகித்துவரும் SRI VENGADA GEM ஸ்தாபனத்தார் நாளைமுதல் (22.02.2002) வெள்ளிக்கிழமை EURO COMPANYயின் தரமான Ruby Corundum சிவப்பு கற்களை எமது வாடிக்கையாளர்கள் அனைவரும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

✪ ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முத்துக்கள் மொத்த விலையில் விற்பனையாகிக் கொண்டிருப்பதுடன் தரமான சின்கெட்டிக் கற்களையும், ஜாதிக் கற்களையும் விசேட கழிவில் பெறலாம்.

*தலைமை அலுவலகம்:*
No.108 - 2/2,
செட்டியார் தெரு,
கொழும்பு. (951)

*கிளை:*
No.299 OR 301,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## 31ஆவது நாள் நினைவஞ்சலி

மலர்வு 10 - 08 - 1942



உதிர்வு 22 - 01 - 2002

### செல்வி மனோறஞ்சினி கந்தையா

உலகுள்ள வரை
உன் புகழ் இருக்கும்
உயிருள்ள வரை
உன் நினைவிருக்கும்

*261/8, கொழும்புத்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/20825)

- குடும்பத்தினர்


**இளங்கலைஞர் மன்றம்**

**இசை விழா**

**மார்ச் - 23 -31**

மேற்படி இசை விழாவில் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை வழங்கவிரும்பும் கலைஞர்களை எதிர்வரும் 01.03.2002 இற்கு முன் தமது விண்ணப்பங்களை அனுபபும்படி வேண்டுகின்றோம்

*சட்டநாதர் வீதி. நல்லூர்.* - செயலாளர் (957)


## தவறிவிட்டன

கதிர்காமு வயிரவப்பிள்ளை என்பவரின் விசேட அடையாள அட்டை (இல.0907007091), தேசிய அடையாள அட்டை (இல.320120896V) மற்றும் வயிரவப்பிள்ளை மேனகா (இல.786221888V), செல்வராஜா மைதிலி (இல.746503547V) ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள் என்பன 18.02.2002 திங்கட்கிழமை கச்சேரியிலிருந்து விமானப் பதிவுக்குச்செல்லும் பாதையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் V.S.B. குறூப் 99,105 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முக வரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(950) தகவல்: **வ.மேனகா**


## தேவை

எமது நிறுவனத்துக்கு புடைவை விற்பனையில் அனுபவம் நிறைந்த வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

1. விற்பனையாளர் (ஆண்/பெண்)
2. கணக்காளர் (ஆண்/பெண்) (ஆங்கில அறிவு மிக அவசியம்)
3. சாரதி (ஆண்) (வயது 35-40) (மோட்டார் சைக்கிள் உட்பட)

உரிய சான்றிதழ்களுடன் 10.03.2002இற்கு முன்னர் 8.30 - 3.30 மணிக்கிடையில் நேரில் வரவும்.

**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

கிளை நிறுவனம்: **யோகாஸ் ஆடையகம்**

18, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/20826)


# மரண அறிவித்தல்கள்

## முத்தையா கந்தையா

***(ஓய்வுபெற்ற முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், இ.மி.சபை)***

நீராவியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கந்தையா அவர்கள் நேற்று (20.02.2002) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சுந்தரலிங்கம் (முன்னாள் நடத்துநர் - இ.போ.சபை, முன்னாள் முகாமையாளர் - நல்லூர் ப.நோ.கூ.சங்கக் கிளை, தற்போதைய வெங்கடேஸ்வரா மரக்காலை, கரன் ஸ்ரோர்ஸ் நீராவியடி - யாழ்ப்பாணம்), சண்முகலிங்கம் (ஜேர்மனி), சந்திரகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஜெயராணியின் (தொண்டர் ஆசிரியை, கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்) ஆசை அப்பாவும் சரோஜினிதேவி, பேரின்பநாயகி (ஜேர்மனி), ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹம்சாயினி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), சங்கீதன் (யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி), தக்ஷின் (ஜேர்மனி), நத்தாஷா (பிரான்ஸ்), ஜெனிற்றாஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், செல்லம்மா மற்றும் பிள்ளையம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2002) வியாழக்கிழமை 56/5, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"மிதிலை",*
*இல.56/5, சம்பியன் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (952)

தகவல்:
கந்தையா சுந்தரலிங்கம்
(மகன்)

## சின்னையா செல்லையா

***(முன்னாள் வீதிப் பரிசோதகர், இ.போ.சபை)***

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா செல்லையா 17.02.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பறுபதத்தின் அன்புக் கணவரும் சி.யோகராசா (ஜோஸி ஹவுஸ், முகமாலை) அவர்களின் உடன்பிறவாச் சகோதரனும் கமலாதேவி, தேவநாதன், பாலச்சந்திரன் (மல்லாவி), சாரதாதேவி, அரியரத்தினம், சித்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தவக்குமார் மற்றும் உஷாதேவி, கெங்காதேவி, அற்புதானந்தன், குலரஞ்சிதராணி, மனோகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் றொசாந்தி, தவசுதன், சாஜீசன், சுபாஜினி, சுரேஷ்காந்த், நிருபன், சஞ்சீவன், ஆர்த்திகா, லக்ஸிகா, தர்மிகா, கஜிபன், கார்த்திகா, காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2002) வியாழனன்று அவரின் தற்காலிக வதிவிடத்தில் பி.ப.2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தபாற்கந்தோர் அருகாக,*
*பருத்தித்துறை வீதி,*
*கோப்பாய் மத்தி.* (947)

தகவல்:
செ.தேவநாதன்
(மகன்)

## திருமதி தம்பையா பொன்னு

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு, இராச வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா பொன்னு அவர்கள் நேற்று (20.02.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும் மற்றும் இளையதம்பி, தங்கம், சின்னத்தங்கச்சி, செல்வம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, நல்லபிள்ளை ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தையா, யோகராணி, பாலச்சந்திரன், சுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் குணராசா (லண்டன்), ரவீந்திரன் (லண்டன்), விஜயகுமார் (லண்டன்), புஸ்பராசா, செல்வகுமார் (லண்டன்), மதி, மதிசுதன், சிறிகரன், சுபாசினி (திருமலை), சுதாகரன் (லண்டன்), ஜங்கரன் (லண்டன்), நந்தினி, கிரிகரன், தர்சினி, செல்வச்சந்திரன் (ஜேர்மனி), யோகச்சந்திரன் (லண்டன்), ஞானச்சந்திரன் (லண்டன்), வசியச்சந்திரன் (கொழும்பு), நிமலச்சந்திரன் (கொழும்பு), தங்கராசா, தங்கராணி, புஸ்பராணி, செல்வராணி, இந்திராணி, சந்திராதேவி, சிவகஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.02.2002) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தோப்பு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராச வீதி,*
*(தோப்பு)*
*அச்சுவேலி தெற்கு.* (955)

தகவல்:
க.புஸ்பராசா
(குழந்தை)

உதயன்

## பாத யாத்திரையில் பங்குகொள்வோம்!

மன்னாரில் அண்மையில் 'தமிழ் எங்கள் உயிர்' எழுச்சி நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு நகரில் நேற்று தமிழ்ச் சமூகத்தின் சார்பில் 'பொங்கு தமிழ்' நிகழ்வை உணர்வுபூர்வமாக - கோலாகலமாக - நடத்த ஏற்பாடாகியிருந்தது.

எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் குடாநாட்டில் சமாதானப் பாத யாத்திரையை நடத்த ஆயத்தங்கள் நடந்துவருகின்றன.

இத்தகைய நிகழ்வுகள் அனைத்தும் ஒரே நோக்கத்தைக் கொண்டவை.

தமிழர்களின் ஒட்டுமொத்த அபிலாஷைகளை வெளிப்படுத்துவதும் சமாதானத்தின் மீது - அமைதித் தீர்வின்பால் - அவர்களுக்கு இருக்கின்ற ஆவலை வெளிப்படுத்துவதுமே இந்நிகழ்வுகளின் ஆத்மார்த்தமான இலக்குகள்.

தமிழ்மக்கள் வேண்டுவது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமாதானத் தீர்வு; வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் தாயகம்; தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே! - இந்த மூன்று விடயங்களை நேற்றைய மட்டக்களப்பு எழுச்சி நிகழ்வு பிரகடனம் செய்தது.

இதேபோன்று -

சமாதானமே தமிழ்மக்களின் ஒட்டுமொத்த அபிலாஷை என்பதை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பாதயாத்திரை வெளிப்படுத்தவிழைகின்றது.

இந்த ஒருமித்த உணர்வை சர்வதேசத்துக்கும் வெளிக்காட்டுவதற்காக குடாநாட்டு மக்கள் அனைவரையும் அணிதிரண்டு வந்து இந்தப் பாதயாத்திரையில் பங்குபற்றுமாறு "சமாதானத்துக்கான சர்வமத பாதயாத்திரையை" இணைந்து ஏற்பாடு செய்துள்ள மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினரும் சர்வமதத் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

மக்களின் இயல்பு வாழ்க்கை நிலை பாதிக்கப்படாமல் இந்தப் பாதயாத்திரையை நடத்துவது குறித்து அதிக சிரத்தை எடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதொன்று.

சமாதான யாத்திரையில் முழுமையாகக் கலந்துகொள்ளமுடியாதவர்கள் யாத்திரை அவ்வப் பகுதியில் செல்கையில் தமது பங்களிப்பை வழங்கலாம் என்பதை ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டிருப்பதையும் பொது மக்கள் கவனத்தில் கொள்வது நல்லது.

சமாதானக் கதவுகள் திறக்கப்படும் தறுவாயில் உள்ள இந்த நேரத்தில் இத்தகைய பாதயாத்திரை சமாதானத்துக்கான சூழ்நிலையை உருவாக்கக்கூடியது என நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் -

பல்வேறு அவலங்களினால் மக்கள் பாதிப்புற்று நெருக்கடிகளைச் சந்தித்துள்ள இந்தச் சமயத்தில் மீண்டும் நிரந்தரமான - நீதியோடு கூடிய - சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தற்போது நடைபெற்றுவரும் ஆக்கபூர்வமான முயற்சிகள் வெற்றி பெற வேண்டி இந்தச் சமாதானப் பாதயாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் -

சுட்டிக்காட்டியிருக்கும் செய்தியை குடாநாட்டு மக்கள் தமது கவனத்தில்கொள்ளவேண்டும்.

சமாதானத்துக்கான தாகத்தை - அமைதிக்கான ஆவலை - வெளிப்படுத்துவதற்கு நமது மக்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது.

சமாதானத்துக்கான நல்லெண்ணச் சூழ்நிலையைக் குழப்பும் இனவாதக் கூச்சல் ஏற்கனவே தென்னிலங்கையில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

இந்த நிலையில் அதை எதிர்கொள்வதற்கு சமாதானத்தின் மீதான மக்களின் விருப்பமும் அமைதிக்கான அத்தியாவசியமும் ஒரே குரலில் வெளிப்படுத்தப்படுவது காலத்தின் தேவையாகுகின்றது.

இந்தத் தேவையை உணர்ந்து, சமாதானப் பாதயாத்திரையில் பங்குபற்றுவது நமது வரலாற்றுக் கடமை என்பதைப் புரிந்துகொண்டு உரிய வகையில் செயற்படுவோமாக!

'பாஸ்' நடைமுறை நீக்கப்பட்டதை அடுத்து

# வவுனியாவுக்கு சென்றோர் திரும்பி வரமுடியாத நிலை

தென்பகுதியிலிருந்து வவுனியாவிற்குள் செல்வோருக்கான பாஸ் வழங்கும் நடைமுறை நேற்றுமுன்தினம் முதல் நீக்கப்பட்டது. இதன் உடனடி எதிர்விளைவாகப் பாஸ் இல்லாமல் வவுனியா சென்றவர்கள் அங்கிருந்து தென்னிலங்கைக்குத் திரும்பமுடியாமல் நேற்றுமுன்தினம் அவதிப்பட்டார்கள்.

தென்பகுதியிலிருந்து - வவுனியாவிற்குள் செல்வதாயின் படையினரால் வழங்கப்படும் பாஸினைப் பெற்றுக்கொண்டே செல்லவேண்டுமென்ற நடைமுறை பல ஆண்டுகளாக இருந்து வந்தது. இதற்காக வவுனியாவின் உள்நுழையும் வாசல்களான ஈரப்பெரியகுளம், ரயில் நிலையம் என்பனவற்றில் வைத்து படையினரால் தற்காலிகப் பாஸ் வழங்கப்பட்டுவந்தது.

ஆனால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட திடீர் அறிவிப்பொன்றை அடுதது பாஸ் வழங்குவது இடைநிறுத்தப்பட்டது. அடையாள அட்டைகளைப் பரிசோதித்த பின் வவுனியாவுக்குள் நுழைய மக்கள் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் வவுனியாவிலிருந்து தென்னிலங்கைக்குத் திரும்பிச் செல்ல முயன்றபோது சிக்கலானநிலை ஏற்பட்டது. அடையாள அட்டையில் தென்பகுதிக்கான விலாசம் குறிப்பிடப்பட்டிருந்தோரும் தென்பகுதி விலாசம் இல்லாதவர்கள் பொலீஸ் பதிவுகளைக் காட்டியும்தான் திரும்பிச்செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அடையாள அட்டையில் தென்பகுதி விலாசம் இல்லாமலும் - கொழும்பு தவிர்ந்த ஏனைய பொலீஸ் பதிவு நடைமுறையில்லாத பகுதிகளிலிருந்து வவுனியாவிற்கு வந்தோரும் திரும்பிச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இவர்கள் வவுனியா அரச அதிபரையும், பொலீஸ் அத்தியட்சகரையும் சந்தித்து தமது நிலையை எடுத்துச் சொல்லவென அலைந்து திரிந்தனர். தென்பகுதியிலிருந்து வருவோருக்கான பாஸ் நடைமுறையே நீக்கப்பட்டுள்ளது. ஆயினும் வவுனியாவில் உள்ளோர் தங்கள் வசமுள்ள வவுனியா பதிவுகளைக் காட்டியும் -

வன்னியிலிருந்து வருவோர் குட்செட் வீதியிலுள்ள இடைத்தங்கல் முகாமில் பதிந்துவிட்டும் தங்கள் பயணத்தை மேற்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

போக்குவரத்துப் பிரச்சினையால் சிக்கல்

# திறந்த பல்கலைக்கு கணனிகள் கிடைத்தும் பயன் இல்லையே!

## யாழ். பிராந்திய அலுவலக இயக்குநர் கவலை

யாழ்ப்பாணம், பெப்.21

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் புதிய கணனி கற்கைநெறியை ஆரம்பிக்க இருபது கணனிகள் தேவை. ஆனால் 5 கணனிகளே கிடைத்தன. அவற்றையும் இங்கு எடுத்துவர போக்கு வரத்துப் பிரச்சினை குறுக்கே நிற் கிறது.

'கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலை'யில் கணனிகள் எபபோது வந்துசேரும் என்று காத்துக்கொண்டிருக்கிறோம்.

- இவ்வாறு இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய அலுவலக இயக்குநர் கவலையுடன் தெரிவித்தார்.

கிடைத்த 5 கணனிகளையும் கப்பல்மூலம் இங்கு எடுத்துவருவதறகு இடம் ஒதுக்கப்படவில்லை. இதனால் அந்தக் கணனிகள் கொழும்புத்துறைமுகத்தில் கடந்த சில மாதங்களாகத் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. அவை எடுத்துவரப்பட்டால் மாணவர்கள் பயனடையக் கூடியதாக இருக்கும் என்றார் இயக்குநர்.

இந்தக் கணனிகளை இங்கு எடுத்துவருவதற்குத் தற்போது இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் உதவியைக் கோரியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (க-6)

### சுகாதார சேவை தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.21

நடமாடும் சுகாதார சேவை தொடர்பான கருத்தரங்கு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மாநகரசபை சுகாதாரக் குழுத் தலைவர் மனுவல் மங்களநேசன் தலைமையில் மாநகர சபை அலுவலகத்தில் உள்ள உறுப்பினர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் மருத்துவ மாதுகள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நடமாடும் சுகாதார சேவை தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புவோர் கருத்தரங்கில் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று தலைவர் அறிவித்துள்ளார். (ம-10-8)

### நவாலியில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் கசிப்பு உற்பத்தி செய்வோரதும் விற்பனை செய்வோரதும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவற்றைத் தயாரிப்பதிலும் விற்பனை செய்வதிலும் பெண்களே அதிகம் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. (ம-100)

### உதயவாக்கு

சென்ற காலத்தைத் தெரிந்துகொள்; வருங் காலத்தை நீ தெரிந்து கொள்வாய்.

### நாளை

மாசி 10
வெள்ளிக்கிழமை
(22-02-2002)
திதி : தசமி
பின்னிரவு 12.28 வரை.
நட்சத்திரம் : மிருகசீரிடம்
மாலை 6.20 வரை
சுபநேரம் : 6.31 - 8.01
ராகுகாலம்: 11.01 - 12.31
(பழைய நேரப்படி)

# எமது சுயநிர்ணய உரிமையை விட்டுக்கொடுக்க முடியாது

## கிழக்கில் புலிகளின் பிரமுகர் உரை

தமிழ் மக்களாகிய நாம் எமது தாயகப் பிரதேசத்தையும் சுயநிர்ணய உரிமையையும் எவரிடமும் எப்போதும் விட்டுக்கொடுக்கக்கூடாது. அவை எமது பாரம்பரிய விழுமியங்கள். எமக்கும் மொழி, கலாசாரம் போன்ற சமூகப் பின்னணி இருக்கிறது. அவற்றை நாம் ஒற்றுமையாக நின்று உறுதிசெய்யவேண்டும்.

- இவ்வாறு கூறியிருக்கிறார் மட்டககளப்பு மண்முனைப்பற்று பிரதேசத்துக்கான புலிகளின் அரசியல்துறைப பொறுப்பாளர் வீரபாண்டியன்.

ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கிராம அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

எமது உரிமைகளை வென்றெடுபபதற்கு, ஒவ்வொரு தமிழனும் உறுதியாக இருக்கவேண்டும். தன்னாலான பங்களிப்பை நல்க முன்வரவேண்டும். எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஞானி என்று சர்வதேச நாடுகளால் போற்றப்படும் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மதிநுட்பமும் அரசியல் சாணக்கியமும்தான் எமது வெற்றிகளுக்கு மூலகாரணம். உலக நாடுகளின் பார்வை எமது தமிழ்த் தாயகம்மீது விழுவதற்கும், பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் எமது ஆயிரக்கணக்கான மாவீரர்களின் உயிர்த் தியாகம் காரணம். அதனால் தமிழன் இன்று தலை நிமிர்ந்து வாழக் கூடியதாக இருக்கிறது - என்றார். (ம)

## நாட்டு நடப்பு

### செல்வம் தந்த உறவு

ஒப்பரும் வறுமை சூழ்ந்தால்
  ஒருவரும் உறவு சொல்லார்
செப்பரும் செல்வம் மேவில்
  சிறப்புற உறவு சொல்வார்
எப்படி உறவென்று கேட்டால்
  எல்லாமே தொடராய்ச் சொல்வார்
அப்பாவின் மாமன் தம்பி
  அவரது இளைய பேரன்
இப்போ இங்கிலாந்தில் வாழும்
  இளையதம்பியரின் பூட்டன்
தம்பியின் மாமன் மைந்தன்
  தனிமகன் மச்சான் என்பர்
இப்படி உறவு சொல்லி
  இன்புற வைக்கும் "செல்வம்"
அப்படியான செல்வப் பேறே!
  அனைத்துலகையும் சொந்தமாக்கிவிட்டாய்!

*- விகடகவி.*

# வெங்காயப் பயிர்களில் குமிழ் அழுகல் நோய்

## விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது வெங்காயப் பயிர்களில் குமிழ் அழுகல் நோயின் தாக்கம் பெரிதும் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

தரையில் அதிக நீர் தேங்குதல், நோயுள்ள விதைக்குமிழ்களை நடுகைக்குப் பாவித்தல், தேவைக்கதிகமான நைதரசன் பசளை பாவித்தல் மற்றும் களைகட்டும்போது குமிழ்கள் தாக்கப்படல் போன்ற காரணங்களால் இந்தப் பங்கஸ் நோய் ஏற்படுகிறது.

நோயினால் தாக்கப்பட்ட பயிரின் தாள்கள் மஞ்சள் நிறமடைந்து படிப்படியாக மேலிருந்து கீழாகக் கருகுவதுடன் தாக்கப்பட்ட குமிழ்களில் இருந்து துர்நாற்றமும் எழும்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அழுகல் நோயற்ற குமிழ்களை நடுகைக்குப் பயன்படுத்தலாம்.

நடுவதற்கு முன்பு நாற்றுக்களை கப்ரான் கரைசலில் 30 நிமிடங்கள் ஊறவைத்துவிட்டுப் பின்பு உலரவைத்த பின் நடுகைக்குப் பயன்படுத்தலாம் - நோயின் தாக்கம் மிகவும் அதிகமாகக் காணப்பட்டால் கப்ரான் மருந்தை ஒரு அவுன்ஸை 2 கலன் நீரில் கலந்து பயிரின் அடிப்பகுதிக்கு விசிறுதல் - ஆகிய முறைகளைக் கையாளவது நல்லது என்று யாழ்.மாவட்ட உதவிவிவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை தெரிவித்தார். (ம-10)

# ஆடம்பரத் தேவைகளுக்கு மின் பயன்படுத்த ஒரு வருடத் தடை!

கொழும்பு, பெப்.21

அலங்கார மற்றும் ஆடம்பரப் வேலைகளுக்கு மின்சார சபையினால் விநியோகிக்கப்படும் மின்சாரத்தை இன்னும் ஒரு வருடத்துக்குப் பயன்படுத்தக்கூடாது என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

மின் அலங்கார வேலைகளுக்கும், விளம்பரப் பலகைகளை ஒளியூட்டுவதற்கும், கட்டடங்களை அழகுபடுத்துவதற்கும் கூட மின்சாரசபையின் மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடாது என்றும் அமைச்சு கண்டிப்பாக அறிவித்துள்ளது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை முதல் இந்த உத்தரவு நடைமுறைக்கு வந்துள்ளது. (ம)

### இவ்வருடமும் தீவகத்தில் வன்னிப் பகுதி ஆசிரியர் பணியாற்ற அனுமதி

தற்காலிக இணைப்புப் பெற்றுத் தீவகப் பாடசாலைகளில் கடமையாற்றிவரும் வன்னிப் பகுதி ஆசிரியர்கள் அனைவரையும் தொடர்ந்து இந்த ஆண்டில் அதே பாடசாலைகளில் பணியாற்றுமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கடிதங்கள் கடந்த திங்கட்கிழமை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டன. (க-10)



வட இலங்கைச் சர்வோதய அறங்காவலர், தொண்டர் அமரர் க.திருநாவுக்கரசு ஞாபக "திருமலர்" வெளியீட்டுவிழா, அண்மையில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் தேவார இசைமணி கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் தேவாரப் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துவதைப் படத்திற்காணலாம். (க)

## யாழ். மாவட்ட மாட்டுவண்டில் சவாரிச் சங்கம்

### வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

நாள்: 24-02-2002 (ஞாயிறு)
நேரம்: பிற்பகல் 2 மணி
இடம்: புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை விநாயகர் ஆலயம்

முக்கிய குறிப்பு: இதில் மாட்டுவண்டி உரிமையாளர், சாரதிகள் மற்றும் சவாரிப்பிரியர்கள் யாவரையும் பங்குபற்றும்படி வேண்டுகிறோம்.

சவாரிச் சங்கம்,
புன்னாலைக் கட்டுவன். (897) - செயலாளர்

## அறிவித்தல்

### இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்
### மருத்துவபீடம் - யாழ்.பல்கலைக்கழகம்

புனர்வாழ்வு, மீளக்குடியமர்வு அமைச்சர் மாண்புமிகு டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா அவர்களால் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட வயது முதிர்ந்த மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக ஒரு தொகை மூக்குக் கண்ணாடிகள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மூக்குக் கண்ணாடி பெறவிரும்பும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட வயது முதிர்ந்த மக்கள், மருத்துவபீடக் காரியாலயத்தில் அதற்கென உள்ள விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து 08.03.2002 ஆம் திகதிக்கு முன்னர் இக்காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றார்கள்.

பீடாதிபதி
மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்
18.02.2002 (C-20819)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



### திரு.இராசரத்தினம் சிறிரஞ்சன்

(யாழ்.பல்கலைக்கழக கலைப்பட்டதாரி - 1982, கிராம அலுவலர், J/169 தொல்புரம் மேற்கு)

அவர்கள் கடந்த பல வருடங்களுக்கு மேலாக எமது கிராமத்தில் எம் மக்களின் குறை நிறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்தும் எத்தகைய பிரச்சினைகளாயினும் தன்னுடைய ஆளுமை, திறமையின் அடிப்படையில் தீர்த்துவைத்தும் எமது தொல்புரம் மேற்கு வாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவரும் ஆவார்.

இவர் மீண்டும் எமது கிராமத்துக்கு நியமிக்கப்பட்டதையிட்டு தொல்புரம் வாழ் மக்களாகிய நாம் மகிழ்ச்சியுடன் அவரைப் பாராட்டுவதுடன், அவரின் சேவையானது மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (930)
இடம்பெயர்ந்தோர் சார்பில்
பொ.கணேசு குடும்பத்தினர்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த 38 வருடகாலமாக சிறந்த சேவையாற்றி நாளை (22.02.2002) வெள்ளிக்கிழமை தமது சிறுபதாவது வயதில் இளைப்பாறும்

### திரு.கந்தையா சிவலிங்கம்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

(905) - உரும்பிராய் வாழ் மக்கள்.

சிவமயம்

## ருது சோபன அழைப்பு

அன்புடையீர்:
ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான விஷ" வருஷம் மாசி மாதம் 10ஆம் நாள் நாளை (22.02.2002) வெள்ளிக்கிழமை மிருகசீரிட நட்சத்திரமும் தசமி திதியும் சித்தயோகமும் கூடிய காலை 8.48 மணிமுதல் 9.54 மணிவரையிலான சுபமுகூர்த்தவேளையில்,

எமது கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி

### ஜெ. பாக்கியலக்ஷ்மி (வைதேகி)

அவர்களுக்கு ருது சோபன நன்னீராட்டு விழா நடத்தப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்: சிவஸ்ரீ வை.ஜெகதீஸ்வரக்குருக்கள்
திருமதி ஜெ.ஜெயகௌரி
தம்பதிகள்.

45, சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (889)

## வாராந்த நிகழ்வில் 'ஞானச்சுடர்' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.21

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக ஞானச்சுடர் மாசிமாத மலர் வெளியீடு இடம்பெறுகின்றது.

வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் மதிப்புரையை சைவப் புலவர் சு.செல்லத்துரையும் நிகழ்த்துவர்.

மலர் வெளியீட்டின்போது வாசகர் போட்டிக்குரிய பரிசில்களும், பாராட்டப்பட்டவர்களின் கேடயங்களும் வழங்கப்படவுள்ளன.

(க)

## இலவச மருந்து வழங்கும் பணி மீண்டும் ஆரம்பம்!

வலிகாமம் தெற்கு,பெப்.21

மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, இணுவில் மக்லியட் வைத்தியசாலை ஆகியவற்றில் இலவச மருந்துவழங்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து மேற்படி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்குவரும் நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளை இலவசமாக வழங்க ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் முடிவுசெய்து நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

ஏற்கனவே வாரத்தில் இரண்டு நாள்களுக்கு நடைபெற்றுவந்த இந்த இலவச வைத்தியமுறை தற்போது தினமும் இடம்பெற்று வருகின்றது.

(க-152-90)

## கிராம அலுவலர்கள் ஓய்வுபெறும் வயதை 60 ஆக நீடிக்க முடிவு!

யாழ்ப்பாணம்,பெப்.21

கிராம அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதை 60ஆக நீடிக்க பொது நிர்வாகத்துறை அமைச்சு தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய அரசு, கிராம அலுவலர்கள் 58வயதுடன் ஓய்வுபெற வேண்டும் என அறிவித்திருந்தது.

அகில இலங்கை ஐக்கிய தேசிய கிராம அலுவலர் சங்கத்தினர் இது சம்பந்தமாகப் பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சுடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து ஓய்வுபெறும் வயதை 60ஆக மீண்டும் நடைமுறைப்படுத்த பொதுநிர்வாக அமைச்சு இணங்கியுள்ளது.

அகில இலங்கை ஐக்கிய தேசிய கிராம அலுவலர் சங்கச் செயலாளர் பீசுகதபாலா, சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் ஓய்வுபெறும் வயது நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

(க-152)

## முகாமைத்துவ டிப்ளோமா விரிவுரை

வலி.தென்மேற்கு,பெப்.21

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை அளவறியும் தொழில்நுட்பமும் மாதிரி பயிற்சி வினாக்களுக்கான விரிவுரைகள் இடம்பெறவுள்ளன.

திறந்த பல்கலைக்கழகத்தில் தரம் 4 முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்கள் மேற்படி விரிவுரையில் கலந்துகொள்ளலாம் என பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் அறிவித்திருக்கின்றார்.

(க-185)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் அதிபராக நீண்டகாலம் சேவையாற்றிவரும் "திரு.க. செல்வக்குமாரன்" முதலாம் தர அதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளமையைப் பாராட்டுகிறோம். அவரது அதிபர் பணி இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து கல்வி உலகிற்குக் கிடைக்க வேண்டும். அதற்குத் தேவையான ஆன்ம பலமும் தேக ஆரோக்கியமும் அவருக்குக் கிடைக்கவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து அதிபர் க.செல்வக்குமாரனை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.க.திருநாவுக்கரசு கிராமசேவையாளர் - கந்தரோடை,
திரு.செ.மகாதேவன் - சமாதானநீதிவான்,
திரு.இ.சுத்தானந்தன - கந்தரோடை. (C/20815)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு
18 - 12 - 1905



சிவபதம்
06 - 02 - 2002

### அமரர் முருகேசு நடராசா
(உபாத்தியாயர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (22.02.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எங்கள் இல்லத்தில் நடைபெறும். அன்று நிகழவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மகன்: புண்ணியமூர்த்தி (தவராசா),
மருமகள்: ஸ்ரீசாலினி,
மகள்: புனிதவதி,
பேரன்: தனஞ்செயன்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு. (909)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1928 - 09 - 29



மறைவு
2002 - 01 - 22

### அமரர் சங்கரப்பிள்ளை கந்தசாமி
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

எமது குடும்பத் தலைவரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும், எம் துக்கத்தில் பங்குகொண்டும் மற்றும் சகலவழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (2002.02.21) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு புற்றளைப் பிள்ளையார் கோயிலடியில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி வழிபாட்டிலும், மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள்; அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

"தமிழகம்",
சாரையடி, புலோலி. (885)
தகவல்: திரு.சி.தில்லைநாதன்
(ஆசிரிய ஆலோசகர்)

## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் அருந்தவராஜா

தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் அருந்தவராஜா அவர்கள் 15.02.2002 வெள்ளிக்கிழமை கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் - புஷ்பராணி தம்பதியினரின் அன்பு மகனும் சசிகலா, சந்திரகலா, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுதாகரன், விஜிதரன் ஆகியோரின் ஆசை மைத்துனரும் சஜித், கஸ்ரோ ஆகியோரின் பாசமிகு மாமனாரும் செல்லர், வயிரி, மாரிமுத்து, சின்னாச்சி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2002) வியாழக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
- நா.நந்தகுமார் (மைத்துனர்)

புலவர் வீதி,
நவாலி வடக்கு. (935)

## மன்னம்பிட்டியில் காத்துநிற்கத் தேவையில்லை

# இரவில் வாகனங்கள் நேரடியாக மட்டக்களப்புக்கே செல்லலாம்!

## செவ்வாய்முதல் புதிய நடைமுறை

மட்டக்களப்பு,பெப்.21

வெளிமாவட்டங்களில் இருந்து மட்டக்களப்பு நோக்கிவரும் வாகனங்களை மன்னம்பிட்டிச் சோதனை நிலையத்தில் தடுத்துவைக்கும் நடைமுறை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் நீக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து இரவுவேளையில் புறப்படும் பஸ் மற்றும் வாகனங்கள் மன்னம்பிட்டியில் நிறுத்தப்பட்டு, காலை 5.45 மணிக்குப் பின்பே மட்டக்களப்புக்குச் செல்ல அனுமதிக்கும் நடைமுறை இதுவரை காலமும் இருந்து வந்தது.

இந்த நடைமுறை செவ்வாய் முதல் நீக்கப்பட்டுள்ளது என்றும் - இரவு வரும் வாகனங்கள் சோதனையின் பின்னர் உடனடியாக மட்டக்களப்புக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதனால் அந்த வாகனங்கள் அதிகாலை வேளையிலேயே மட்டக்களப்பு நகரை வந்தடையும்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.(க-3)

### பாஸ் நடைமுறை வவுனியாவில் தளர்வு

வவுனியாவில் நடைமுறையிலுள்ள அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் முறையில் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் நாட்டின் தென்பகுதியிலிருந்து வவுனியாவுக்கு வருகைதந்தோருக்கு அனுமதிப்பத்திரங்கள் (பாஸ்) வழங்கப்படவில்லை. மாறாக அவர்களின் தேசிய அடையாள அட்டைகளின் இலக்கங்கள் மட்டுமே பதியப்பட்டன.

முன்னர் தென்பகுதியிலிருந்து வவுனியாவுக்கு வருவோருக்கு ஈரப்பெரியகுளம் மற்றும் வவுனியா ரயில் நிலையம் ஆகிய இடங்களில் வைத்து 14 நாள்களுக்குரிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

### மத்திய வங்கி குண்டுவெடிப்பு வழக்கு விசாரணை

மத்திய வங்கி குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பிரதான சந்தேக நபராக புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை மையப்படுத்தியுள்ள இந்த விசாரணையில் புலிகளின் உளவுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், சாள்ஸ் ஆகியோரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள பார்த்தீபன், சிவகணநாதன், கார்த்திகேயன் ஆகியோர் அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர்.

## மூன்று நாள்களுக்குள்ளேயே

# மொரீஷியஸில் ஜனாதிபதியாக பதவியேற்ற தமிழர் ராஜினாமா!

மொரீஷியஸ் தீவின் முதலாவது தமிழ் ஜனாதிபதியான ஏ.செட்டியார் ராஜினாமா செய்துவிட்டார். அவர் மூன்று தினங்களுக்கு முன்னர்தான் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார்.

இவரது ராஜினாமாவை அடுத்து அந்நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு மொரீஷியஸ் அரசு சமீபத்தில் உருவாக்கிய ஒரு கடுமையான சட்டமே புதிய ஜனாதிபதியையும் ராஜினாமா செய்யவைத்திருக்கிறது. முன்னைய ஜனாதிபதியின் ராஜினாமாவுக்கும் இச்சட்டமே காரணமாகும்.

இச்சட்டம் தனிமனித உரிமையைப் பாதிப்பதாகத் தெரிவித்து அதனை எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன. சட்டம் அமுலாக ஜனாதிபதி அதில் கையெழுத்திடவேண்டும். ஆனால் முன்னைய ஜனாதிபதி காசம் உதீம் கையெழுத்திட மறுத்துவிட்டார்.

அந்நாட்டின் சட்டப்படி ஜனாதிபதி இரண்டாவது தடவையும் கையெழுத்துப்போட மறுத்தால் பதவியில் நீடிக்கமுடியாது. அதன்படி இரண்டாவது தடவையும் மறுத்த காசம் உதீம் பதவிதுறந்தார்.

புதிய ஜனாதிபதி செட்டியார் எதிர்க்கட்சிகளுக்கு நெருக்கமானவர். இந்நிலையில் அவர் பிரதமர் அனிருத் ஜெகநாத்தைச் சந்தித்து தனது ராஜினாமாவை அறிவித்தார். (உ)


உ

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் துணை

50ஆவது பிறந்த நாளில்

வாழ்த்தி மகிழ்கின்றோம்

யாழ்ப்பாணம், 176/1, நாவலர் வீதியைச் சேர்ந்த

அர்ச்சனா ஜுவலர்ஸ்

உரிமையாளர்

திரு.சி.சிவமூர்த்தி அவர்களின்

பிறந்த தினமாகிய இன்று (21-02-2002) வியாழக்கிழமை, அவர் அளவையூர் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா அவர்களின் நல்லாசி பெற்றுச் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு வாழ உளமார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

அவரது பிறந்த தினமாகிய இன்று செல்வச்சந்நிதி முருகன் சந்நிதியில் அன்னதானம் நடைபெறுகின்றது. அனைவரும் இதில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
மருமகன், மகள்,
பேர்த்தி.

594/2, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (936)


## அறிவித்தல்

*மாநகரசபை, யாழ்ப்பாணம்*

### கட்டாக்காலி மிருகங்களைப் பிடிப்பதற்கு ஆளுமையுடையவர்களை நியமித்தல்

யாழ்.மாநகரசபையின் எல்லைக்குள் வீதிகளிலும், தோட்டங்களிலும் வேறுவிதத்தில் பொதுச்சேதம் விளைவிக்கும் கட்டாக்காலி மிருகங்களைக் கட்டிவளர்க்கும்படி 21.07.2001அம் திகதிய உதயன் பத்திரிகையிலும், வலம்புரி பத்திரிகையிலும் விளம்பரம் செய்யப்பட்டது. அதன் பிரகாரம் பொதுமக்கள் மிருகங்களைக் கட்டி வளர்க்கும் நடவடிக்கையைக் கடைப்பிடிக்கவில்லை. இதன் காரணமாக மாநகரசபைக் கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252 இன்கீழ் கட்டாக்காலி மிருகங்களைப் பிடிப்பதற்கு ஆளுமை உடையவர்களை நியமிப்பதற்கு மாநகரசபை எல்லைக்குள் வதியும் நன்னடத்தையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 08.03.2002
ஒரு மிருகம் பிடிப்பதற்கான கட்டணம் : ரூ.50/-

*ஏனைய விவரங்களை மாநகரசபையில் வேலை நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.*

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, *யாழ்ப்பாணம்.*
19-02-2002 (சி-20830)

# வசதிகுறைந்த மக்களுக்கு ஆயிரம் மூக்குக் கண்ணாடிகள்!

## "இன்ரர் பிளாஸ்ற்" நிறுவனம் வழங்குகிறது

யாழ்ப்பாணம்,பெப்.21

குடாநாட்டில் வசதிகுறைந்த மக்களுக்கு லண்டன் 'இன்ரர் பிளாஸ்ற்' நிறுவனம் ஆயிரம் இலவச மூக்குக் கண்ணாடிகளை ஜேர்மன் உதவி நிதியம் ஊடாக வழங்கிவருகின்றது. கடந்தவாரம் 'பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்களை இங்கிருந்து அழைத்து வந்த கொழும்பு ஜேர்மன் உதவி நிதியத்தின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது நேரடியாகவே வைத்தியசாலைகள் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு பரிசோதனை செய்து கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. இக கண்ணாடிகளை பரிசோதனை செய்து வழங்கவென பிரிட்டனில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர், தாதியர்கள் என மூவர் வருகைதந்துள்ளனர்.

இவர்கள் கடந்த 15ஆம் திகதி உடுவில் 'மிஸேயிட்' வைத்தியசாலையில் 160 பேருக்கும், 16ஆம் திகதி மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் 160 பேருக்கும் பரிசோதனை செய்து கண்ணாடிகளை வழங்கினர்.

இந்தவாரம் பருத்தித்துறை, காரைநகர், மூளாய் போன்ற வைத்தியசாலைகளில் பரிசோதனை மேற்கொண்டு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (க-180-ரி)

# உலக மாயைகளில் இருந்து விடுபடுவோம்

**தவக்காலச் சிந்தனை**

**ஒன்பதாம் நாள்**

இன்றைய உலகில் பணம், பொருள், சொத்து, வீடு இவை அனைத்தும் வாழ்வுக்குத் தேவையானது. வாழ்வுக்காக நாம் இவற்றைப் பயன்படுத்தும்போது அது நல்லது. அதில் தவறில்லை. ஆனால் நாம் இவற்றிற்காக மட்டும் வாழும்போதுதான் தவறுகின்றோம். பணமும் சொத்துக்களுமே வாழ்வின் குறிக்கோளாக மாறும்போது இறைவனை விட்டுப் பிரிகின்றோம். இந்த உலகின் பற்றுக்களில் நாம் வாழும்போது முடிவில்லா வாழ்வின் கதவுகளை நாமாக மூடிவிடுகின்றோம். எமது வாழ்வானது முடிவில்லா வாழ்வைக் கண்டடையும் வாழ்வாக, அதையே தேடி அலையும் வாழ்வாக அமையவேண்டும்.

"கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். என்னும் தெய்வீக உண்மையை செபம் சுட்டிக்காட்டுகின்றது. எமது வாழ்வில் செபம் இரண்டறக்கலந்ததாக இருக்கவேண்டும்.

இறைவனின் திட்டம் எம்மில் நிறைவேறவேண்டுமென்று விரும்புவதே உண்மையான செபம்.

ஆனால் இந்த செபம் எமது வாழ்வில் எந்த இடத்தில் உள்ளது? நாம் இதை உணர்ந்து செயற்படுகின்றோமா?

எமக்கு ஆபத்து, வேதனை, கவலை, துன்பங்கள் வரும்போது அதாவது எமது தேவைகள் நிறைவேற வேண்டும் என்று எண்ணும்போது இறைவனை நாடி, அவரே தஞ்சம் என்று காலையும் மாலையும் ஆலயத்துக்குச் செல்கின்றோம். ஆனால் எமது தேவைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டால் மறுகணமே இறைவனை மறந்துவிடுகின்றோம். அழிவுக்குச்செல்லும் பாதையில் வழிநடக்கின்றோம். நம்முடைய சுயநலத்திற்காக பணத்தையும் புகழையும் தேடி அலைகின்றோம்.

மனமாற்றத்தின் காலமாகிய இத்தவக்காலத்தில் பிறர் எமக்கு எதைச் செய்யவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கின்றோமோ அதையே நாம் பிறருக்குச் செய்ய முயற்சிசெய்வோம். செபமே முடிவில்லா வாழ்வைத் தேடக்கூடிய வல்லமைமிக்க கருவி. என்பதை உணர்ந்து வாழ்வுக்குச் செல்லும் வழியாகிய செபத்தில் ஈடுபடுவோம். இவ்வாறாக நாம் மனம் மாறி இறைவனைத் தேடிக்கண்டடையும்போதுதான் எமது உள்ளத்தில், எமது மண்ணில், எமது நாட்டில் நீதி, சமாதானம், அமைதி மலரும். புதுவாழ்வு உதயமாகும்.

*யாழ்ப்பாணம்.* **செல்வி அ.மேரி ஜெலோனா**

## எம் மண்ணில் எங்கும் மிதிவெடி அச்சுறுத்தல்

# மாணவர்களை விழிப்படைய வைத்திருக்கும் உணர்ச்சிமிகு 'நெஞ்சுறுத்தும் கானல்'

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் 'யுனிசெவ்' நிறுவனமும் ஒன்றிணைந்து, பாடசாலைகளில் 'நெஞ்சுறுத்தும் கானல்' என்ற பரப்புரை நாடகத்தை மேடையேற்றி வருகின்றன. தே.தேவானந்தின் நெறியாள்கையில் உருவாகிய இந்நாடகம், மாணவர்களிடையே மிதிவெடி, வெடிபொருள்கள் போன்றவை குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக விரிவுரைகள், போதனைகள் என்பவற்றின்மூலம் குறிப்பிட்டதொரு விடயத்தைப் போதிப்பதைக் காட்டிலும், அரங்கு மூலம் அவ்விடயத்தை வெளிப்படுத்தும்போது அது கூடிய தாக்கு வலுவினை ஏற்படுத்தி நிற்கும். எனவே, யாழ்.குடாநாட்டில் மிதிவெடி, வெடிபொருள்கள் என்பவற்றால் ஏற்பட்டுவரும் அனர்த்தங்களை மாணவர்கள் மத்தியில் பரப்புவதற்கு 'யுனிசெவ்' நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து அரங்கு வழியான செயற்பாட்டினை மேற்கொள்கின்றன. அச்செயற்பாடே 'நெஞ்சுறுத்தும் கானல்' என்ற ஆற்றுகையாக இன்று நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

'நெஞ்சுறுத்தும் கானல்' ஒரு பரப்புரை நாடகமாகும். முற்றுமுழுதாக ஒரு பரப்புரை நாடகத்தைத் தயாரிப்பதென்பது சுலபமானதல்ல. எனினும் தே.தேவானந்தின் நெறியாள்கையில் கவிஞர் இ.முருகையனின் கவிதைகள், த.றொபேட்டின் இசை, நடிகர்களின் திறன் என்பவற்றை ஒழுங்குபட இணைத்து 'நெஞ்சுறுத்தும் கானல்' என்ற பரப்புரை நாடகம் வீரியத்தோடு பிரசவிக்கப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டுவருகின்றது.


மிதிவெடி, வெடிபொருள்கள் என்பன தொடர்பான பாதிப்புக்களை மெல்லிய நகைச்சுவையையும், சோகத்தையும் கலந்து அதனூடாகக் கூறுவதன்மூலம் பார்ப்பவர் மனதிலே தாக்கத்தைத் தோற்றுவிக்கின்றன.

பிரமாண்டமான காட்சியமைப்பு, இசை, விளக்கப்படக் காட்சித்திரைகள், உணர்ச்சிமிகு கவிதைகள், ஆழமான வசனங்கள் என்பனவும் நடிகர்களின் திறமையான செயற்பாடும் இந்நாடகத்தை மேலும் வலுவாக்குகின்றன.

'நெஞ்சுறுத்தும் கானல்' நாடகம் இதுவரை 5 பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டு மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் அமோக வரவேற்பினைப் பெற்றதோடு மட்டுமன்றி, மாணவரிடையே மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நாடகம் ஏறக்குறைய 84 பாடசாலைகளில் மேடையேற இருக்கின்றது. காலத்தின் தேவையை நன்குணர்ந்து அளிக்கை செய்யப்படும் 'நெஞ்சுறுத்தும் கானல்' நாடகம், மாணவர் நெஞ்சங்களிலே மிதிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

**த.பிரபாகரன்.**



மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்களால் மாணவர்களுக்கு ஏற்படும் பேரபாயங்கள் குறித்து பாடசாலைகள் தோறும் மேடையேற்றப்படும் "நெஞ்சுறுத்தும் கானல்" நாடகத்தை ஆவலுடன் பார்த்து ரசிக்கும் மாணவர்களையே படத்தில் காண்கிறீர்கள். (க-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருமண சேவை

கம்பியூட்டர் மூலம் உங்கள் சாதகங்கள் மிகத்துல்லியமான முறையில் கணித்துக்கொடுக்கப்படும். அத்துடன எண், கிரகபலன், திருமணப்பொருத்தம் என்பன பார்க்கப்படும். நேரம்: காலை 8.30 -11.00, மாலை 3.00 - 6.00. தொடர்பு: நா.கந்தையா, சதுர்ஷிகா ஜோதிட நிலையம், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (787)

## வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடையவேண்டுமா? கணிதம் கற்பித்தலில் 40வருடங்களுக்கு மேல் அனுபவம்வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும்.O/L, 10,9,8,7,6 தரங்கள். இல.8. பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி (மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்). (C/20798)

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி DIP/CER IN SCIENCE (LONDON PADDINGTION CAMPUS ENGLAND) 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (910)

## விற்பனைக்கு

அலங்காரப் பந்தல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அநித்தியானந்தன், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில். (916)

புதிய SPEAKER BOX (2) (150W), HITACHI DOUBLE DOOR பிறிட்ஜ் எனபன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வெ.சிவகுமார், பருத்தித்துறைவீதி, கட்டைப்பிராய். (875)

புத்தம் புதிய திறிபேஸ் கொம்பிறசர், பாத் பிறிச், எஞ்சின் மற்றும் பொருள்கள், முட்டாஸ் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.பார்த்தீபன், நவாலி கிழக்கு, மானிப்பாய். (931)

## மணமகள் தேவை

இந்து கௌரவ, 1964இல் பிறந்த, லண்டனை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட, தொழிலுடைய, கிரகபாவம் குறைந்த, A/L படித்த மகனுக்குப் பெற்றோர் பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விள.இல. 1467, மே/பா உதயன். (937)

## தவறிவிட்டது

வதிரி கரவெட்டியைச் சேர்ந்த ச.இந்துமதி என்பவரின் விசேட அடையாள அட்டை, பாஸ் என்பன பருத்தித்துறைக்கும் தொண்டமானாறுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நா.சண்முகலிங்கம், இரும்பு மதவடி, வதிரி கரவெட்டி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (939)

## வெள்ளத்தில் மூழ்கிய நெல்லின் விலை குறைவு

யாழ்ப்பாணம்,பெப்.21

வலிகாமம் பகுதியில் வெள்ளத்தில் மூழ்கிய பின்னர் அறுவடை செய்யப்பட்ட நெல் இனங்கள் குறைந்த விலையிலேயே விவசாயிகளால் விற்பனை செய்யப்படுகின்றன.

500-1, 500 டாஸ், 400-1 இனங்களும், மொட்டைக் கறுப்பன், பெரிய வெள்ளை போன்ற, இனங்களும் ரூபா 1400 முதல் 1500 வரையிலும் -

நீரில் மூழ்காத மேற்படி இனங்கள் ரூபா 1500 முதல் ரூபா 1900 வரை விற்பனை செய்யப்படுகின்றன. (ம-185)

# வாழ்த்துகின்றோம்

தென்மராட்சி
வலயக் கல்விப் பணிப்பாளர்

## திரு.வ.செல்வராசா

அவர்கள் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை II இற்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரை உளமார வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி வலயக்கல்வி
அலுவலக அலுவலர்

(C/20823)

## யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்
## யா/ஒட்டுவெளி அ.மி.த.க.பாடசாலை
## இல்ல மெய்வன்மைப் போட்டி - 2002

*காலம்* : நாளை (2002.02.22) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி
*இடம்* : வித்தியாலய மைதானம்
*தலைவர்* : திரு.த.யோகராசா (முதல்வர்)
*முதன்மை விருந்தினர்*: அருட்திரு.மனுவேற்பிள்ளை டேவிற் (பழைய மாணவர்.விரிவுரையாளர் L.Tb புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி. கொழும்புத்துறை)
*விருந்தினர்கள்* : திரு.இ.சிவஞானசுந்தரம் (உதவிக் கல்விப் பணிப்பாளர். கோப்பாய் கோட்டம்)
திரு.இ.கணேசன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர். தென்மராட்சி வலயம்)
திரு.கோ.வரதராசமூர்த்தி (உதவிக் கல்விப் பணிப்பாளர். தென்மராட்சி வலயம்)
திரு.சி.விஜயகுமார் (பழையமாணவர். உரிமையாளர் விநாயகர் பல்பொருள்வாணிபம். உரும்பிராய் வடக்கு)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

யா/சைவத்தமிழ் வித்தியாலயம். உரும்பிராய். - பாடசாலைச் சமூகம்.

(938)


## உங்களிடம் கணணிகள் இல்லையென்ற கவலையா?

இலகு தவணையில் வங்கிக் கடன் வசதியுடன் தரமான கணணிகள் மலிவு விலையில்

Intell Pentium IV .1.6GHz

P.III 1000 M.Hz



மற்றும்

சகல Computer உதிரிப்பாகங்களும் மலிவு விலையில்

மேலும் விபரங்களுக்கு

SRIMURUGAN COMPUTER SYSTEMS

303,K.K.S.Road, Jaffna

T.P:021-2670,021-3588 Fax:021-3214 Email:del-smskr@eureka.IK

குறிப்பு:எம்மிடம் பதிவு செய்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.


# துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலய ஆசிரியர்
செல்வி மனோரஞ்சனி பாலசிங்கம் அவர்களின்
அன்புத் தந்தையார்

## கந்தையா பாலசிங்கம்

அவர்கள் நேற்றுமுன்தினம் (19.02.2002) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது மறைவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர், மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்.

யா/நாரந்தனை றோ.க.மகா வித்தி,
ஊர்காவற்றுறை.

(953)

# கூறுவிலை கோரல்

சுன்னாகம் மத்திய மின் நிலையத்துக்குட்பட்ட நிலங்களில் உள்ள பற்றைகளை வெட்டி வேர்களைக் களைந்து நிலத்தைச் சுத்தப்படுத்துவதற்கும் அத்துடன் அங்கு வைக்கப்பட்டுள்ள பழுதடைந்த மின்கம்பங்கள் எல்லாவற்றையும் ஓர் இடத்தில் ஒழுங்காக அடுக்கிவைப்பதற்குமான கூறுவிலைகள் தகுதியுடைய ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. இது தொடர்பான மேலதிக விவரங்கள், சுத்தப்படுத்த வேண்டிய இடங்களைப் பார்வையிடல் என்பவற்றுக்கு எமது சுன்னாகம் மத்திய மின்நிலைய பொறுப்பதிகாரியான மின் பொறியியலாளர் அவர்களை அலுவலக நாள்களில் காலை 10 மணி தொடக்கம் மாலை 2 மணிவரையில் சந்தித்துப் பெற்றுக் கொள்ளலாம். இந்தக் கூறுவிலைகளைச் சமர்ப்பிப்பதற்குரிய விண்ணப்பப் பத்திரங்களை எனது அலுவலகத்தில் 2002.02.25 ஆம் திகதி தொடக்கம் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூபா 50/- பெறுமதியான தபால் காசுக் கட்டளையைக் கையளித்து எதிர்வரும் 2002.03.04ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் எதிர்வரும் 2002.03.05ஆம் திகதி காலை 10 மணிக்குமுன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

*பிரதிப் பொதுமுகாமையாளர்*
*(வடக்கு)*

பி.பொ.மு(வ) அலுவலகம்,
இ.மி.சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(C-20822)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 |  | 15 |
| - | | - |
| 05 | | 02 |
| - | | - |
| 1947 | | 1997 |

அமரர்

## தம்பிப்பிள்ளை பத்மநாதன்

(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி - பருத்தித்துறை)

திதி: 21.02.2002

அன்போடு பழகிய அப்பாவே! எங்களை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் ஐந்து ஆகிவிட்டனவே! நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களைவிட்டு என்றும் மறையாது!

*உங்களின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும்:*

மனைவி, பிள்ளைகள்.

*"வியாலவத்தை",*
*நெல்லியடி,*
*கரவெட்டி.*

(C-20821)

# மரண அறிவித்தல்

## தம்பு கந்தையா

புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்தவருமாகிய தம்பு கந்தையா அவர்கள் 16.02.2002 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - குழந்தைனாச்சி தம்பதியினரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - நல்லதங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கண்மணி, கனகம்மா, பிள்ளையினார், செல்லத்தம்பி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவகாமி, வள்ளியம்மை, மூத்தையா மற்றும் செல்லம்மா, தங்கம்மா (சுவிஸ்), இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலச்சந்திரன் (Bala Morril Lynch), அருந்ததி, கல்விக்கரசி, Dr.விக்கினேஸ்வரன், சிவச்சந்திரன் (சிவா), பிறேமச்சந்திரன் (அருள்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கமலநாதன், ஜெயா, செல்வராஜா, விஜயலக்சுமி, சியாமளா, புஸ்பராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.02.2002) புதன்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மகாலெட்சுமி *(ஆசிரியை)*
(பேர்த்தி)

*10ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*

(943)

T.P: 416-7548343



தோற்றம்
14-07-1951

மறைவு
07-02-2002

சிவமயம்

# உத்திர கிரியை அழைப்பு

எனது அன்பு மனைவ **திருமதி ரஞ்சனியம்மாள்**

அவர்கள் 07.02.2002 இல் இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது நினைவாக இன்று (21.02.2002) வியாழக்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை (22.02.2002) வெள்ளிக்கிழமை ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இந்தியாவில் ஸ்ரீரங்கத்துக்கருகிலுள்ள தேசியாபிள்ளை தோப்பு அம்மா மண்டபத்தில் நடைபெறுகின்றன என்பதை எமது அன்பர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

S.தனராஜா அவர்களும்
(அருமைக் கணவர்)
பிள்ளைகளும்.

*பவானி விலாஸ்,*
*32/1, கல்லூரி வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*

(924)

## அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றம்

# தாயகத்தில் இன்னலுறும் தம் சகோதரர்களுக்கு உதவத் துடிக்கும் லண்டன் வாழ் ஈழத்தமிழர்கள்

கொழும்பு,பெப்.21

லண்டனில் உள்ள ஈழத்தமிழர்களிடம் தாய்நாட்டில் உள்ளவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்குள்ள இந்து ஆலயங்கள், பொது அமைப்புகள் என்பன தமது அமைப்புகளுக்குச் சேரும் நிதியில் ஒரு பகுதியைத் தாயகத்தில் இன்னல்படும் தமிழர்களுக்கு வழங்க முன்வந்துள்ளன.

தாயகத்தில் பொதுச் சேவையில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு இவை நேரடியாகவே இத்தகைய நிதி உதவிகளை வழங்கியும் வருகின்றன.

இவ்வாறு உதவி வழங்கும் லண்டன் அமைப்புகளுக்கு அங்குள்ள தமிழர்கள் பெருமளவு நிதி உதவியை வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முத்துத்தம்பி சைவ வித்தியா விருத்திச் சங்கம், கந்தரோடையில் கணவனை இழந்தவர்களுக்கான வீடமைப்புத் திட்டம் என்பனவற்றுககு ஏற்கனவே இவ்வாறான நிதி உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

"தாயகத்தில் உள்ள சமூகத் தொண்டு நிறுவனங்கள் அனுப்பும் விண்ணப்பங்களைப் பரிசீலித்துத் தகுதியானவற்றுக்கு நாம் நிதி உதவிகளை வழங்கி வருகின்றோம். இது வரை நாம் வழங்கிய நிதி எதுவும் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகப் புகார்கள் இல்லை.

"இங்கு லண்டனில் தாயகத்தில் உள்ளவர்களுக்கு தம்மால் முடிந்தளவு உதவிகளை வழங்கவேண்டும் என்ற மனோபாவம் மிக வேகமாக அதிகரித்துவருகின்றது" - என்றார் லண்டனின் பிரசித்தி பெற்ற இந்து ஆலயம் ஒன்றின் நிர்வாகசபை உறுப்பினர் ஒருவர். (ம)

# போரினால் பாதிப்புற்ற வறிய மக்களுக்கு குடாநாட்டில் இலவச சட்ட உதவிகள்

## கொழும்பில் இருந்து சட்டத்தரணி வருகிறார்

போரினால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மக்களுக்கு இலவச சட்ட உதவிகளை வழங்குவதற்கு 'செடேக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் 'கியு, டெக்' நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யுத்த அனர்த்தங்களின்போது காணாமற்போனவர்கள், அவசரகால சட்டத்தின் கீழ் அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்போர் மற்றும் ஜீவனாம்சம், ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகள், தொழில் பாதிப்பு ஆகிய விவகாரங்களுக்கே சட்ட ஆலோசனைகள் வழங்கப்படும்.

இத்தகைய பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள வறிய மக்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று தமக்குரிய நிவாரணத்தைப் பெறமுடியாமலும் சட்ட நடைமுறைகள் பற்றி தெரியாமலும் அவதிப்படுகின்றனர். அவர்களுக்கு உதவும் நோக்குடனேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக கியூடெக் நிறுவன இயக்குநர் தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக கொழும்பு "செடேக்" நிறுவன சட்ட ஆலோசகர் சட்டத்தரணி பிறேந்த கமகே யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

எதிர்வரும் 2ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த "நடமாடும் சட்டசேவை" இடம்பெறும் இடங்களும் நேரமும் வருமாறு:

★ 2ஆம் திகதி காலை 9 மணிக்கு குருநகர் சனசமூக நிலையம், பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பேராலய மண்டபம்.

★ 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை பங்கு குருமனை, பிற்பகல் 2.30 மணிக்கு கரவெட்டி பங்கு குருமனை.

★ 4ஆம் திகதி காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை பங்கு குருமனை

★ 5ஆம் திகதி காலை 9 மணிக்கு இளவாலை பங்கு குருமனை, பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் பங்கு குருமனை.

இலவச சட்ட உதவி தொடர்பான ஆலோசனைகளைப் பெறுபவர்களுக்கு தேவை ஏற்பட்டால், நீதிமன்றங்களில் வழக்காடுவதற்கும் சட்டத்தரணிகளின் உதவியும் கூட இலவசமாகக் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## பிரான்ஸில் முற்றம்!

யாழ்ப்பாணம்,பெப்.21

திருமறைக் கலாமன்றத்தின் பிரான்ஸ் கிளையினரால் 'முற்றம்' என்ற கலை இலக்கிய செய்தி இதழ் ஒன்று இவ்வருடத்தில் வெளிவரத் தொடங்கியுள்ளது.

இதேவேளை -

பிரான்ஸில் திருமறைக்கலாமன்றம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி தமிழ் விழா ஒன்றையும் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. இந்த விழாவில் "புகலிடத்தில் தமிழ்" என்ற கருப்பொருளில் ஆய்வரங்கும் நடைபெறவுள்ளது. (க-6)

## வழிகாட்டல் செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை தரம் 4 வகுப்புகளில் ஆங்கிலப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய ஆங்கில பாட புத்தகம் தொடர்பான வழிகாட்டல் செயலமர்வுகள் எதிர்வரும் மார்ச் 8, 9 ஆகிய திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(க-117)

# துண்டி மயானத்தை மக்களின் பாவனைக்குவிட நடவடிக்கை

## கண்ணிகள் அகற்றப்படுகின்றன

அரியாலை,பெப்.21

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுவதற்கான ஏற்பாடுகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மயானத்தைச் சூழவுள்ள பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றும் பணியில் தற்போது இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாகவும் -

இந்தப் பணி பூர்த்தியடைந்ததும் மக்கள் பாவனைக்கு மயானம் திறந்துவிடப்படும் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மயானத்திற்குச் செல்வதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படாததினால் இப்பகுதி மக்கள் பூதவுடல்களை தூர இடங்களுக்குக் கொண்டு சென்றே தகனம் செய்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் இந்த மயானத்தை பாவனைக்குத் திறந்துவிடுமாறு பொது மக்கள் பலதடவைகள் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்படத்தக்கது. (ம-17)

# யாழ்.குடாநாட்டில் மாணவர்களின் கல்வி வளம் சிதையவில்லை என்பதை நிரூபித்த கண்காட்சி

## விஞ்ஞானத்தை மட்டுமன்றி விவசாயத்தையும் செயல்முறைகள் மூலம் சிறப்புற விளக்கினர்

**போர்**ச் சூழலும் பொருளாதார நெருக்கடிகளும் குடாநாட்டின் எந்த வளத்தை வேண்டுமானாலும் சீர்குலைத்திருக்கலாம். ஆனால் அவற்றால் குடாநாட்டின் அணிவேராகத் திகழும் கல்வி வளத்தை மட்டும் அசைக்கவும் முடியவில்லை.

இந்த நம்பிக்கையை அளித்தது சமீபத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் யாழ்.விஞ்ஞான சங்கம் நடத்திய விஞ்ஞானக் கண்காட்சி.

3 நாள்கள் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில் நீராவி ஓடம், மின் சாதன உபகரணங்கள், எளிய பொறிகள், திரவ அடர்த்தி அளக்கும் கருவி, பன்னிற உருக்காட்டி, நோய்த்தடுப்புச் சம்பந்தமான ஆலோசனைகள், இயற்கை ஈந்த பொருள்களைக் கொண்டு நாம் சுகவாழ்வடைய புதிதாக பயன்படுத்தக் கூடிய மருத்துவப் பொருள்கள் பசளை (சேதனம்), மனிதனுக்குத் திங்கிழைக்கும் போதைப் பொருள்கள் பற்றிய விழிப்புணர்வு முதலான பல பொருள்கள் குடாநாட்டு அறிவியலை வெளிக்காட்டின.

பாடசாலைகள் ஒவ்வொன்றும் தமது விஞ்ஞானக் காட்சிப் பொருள்களை முன்னிலைப்படுத்தி விளக்கம் கொடுத்தமை சிறப்பாக விளங்கக் கூடியதாக அமைந்திருந்தது.

மாணவர்கள் தாம் கொண்டு வந்த பொருள்கள் பற்றிய பூரண விளக்கத்தை அளிக்க வேண்டும் என்பதில் ஒரே நோக்கோடு ஆர்வத்தோடு விளக்கமளித்தனர்.

இதில் வியப்பு என்னவெனில் கண்காட்சி இடம்பெற்ற மூன்று நாள்களும் ஒரே மாணவர்களே சலிக்காமல் களைக்காமல் விளக்கமளித்தனர்.

கண்காட்சியில் இடம்பெற்றிருந்தவற்றின் மூலம் மாணவர்களின் ஆற்றல் வெளிப்பட்டிருந்தது.

### முதல் இடம்

யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்களால் இன்றைய மனித சமூகத்துக்கு அடிப்படை பிரச்சினையாக அமைந்து காணப்படும் சூழல் மாசடைதல் பிரச்சினைக்கு விளக்கமளிக்கப்பட்டது. அவர்களது தலைப்பே 'மனிதா! உனக்கோர் அறைகூவல்' என அமைந்தது. போட்டியில் முதலாம் இடம்பெற்றதும் இதுவேயாகும். இது வித்தியாசமானதும் அறியப்படாததுமான பல விடயங்கள் உள்ளடக்கி விளக்கம் அளிக்கப்பட்டது. இன்றைய யாழ்.குடாநாட்டு விவசாயிகளை அச்சுறுத்தும் பாதீனியத்தின் பெருக்கம் எந்த அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது என விளக்கிய அவர்கள் இந்தக் களை மூலம் சுவாச நோய்கள் கூட உண்டாகும் எனும் அதிர்ச்சி தரும் ஒரு விடயத்தினை அறிவுறுத்தினர். சூழல், கடல், நீர், தரைப்பாதுகாப்புப் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

### எளிமையான விளக்கம்

யாழ்.இந்து மகளிர் மாணவிகளது 'சனத்தொகைப் பிரச்சினையும் அதற்கான தீர்வும்' என்ற காட்சியமைப்பு சிக்கலான இந்த விடயத்தை எளிமையாக விளங்கப்படுத்தியது.

மிகவும் நுட்பமானமுறையில் சனத்தொகை புள்ளி விவரங்களை நாடுகள், கண்டங்கள் எனப் பாகுபடுத்தி எளிமையாக விளக்கியிருந்தனர்.

அத்துடன் தாவரங்களை பாதிக்கும் பூச்சிகள், தாவரங்களுக்கு நன்மை விளைவிக்கும் உயிரிகள் என்பவற்றினையும் களை, கிருமிநாசினிகளை உபயோகிக்கும் முறை பற்றியும் கூறப்பட்டது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் பரீட்சார்த்தமானதும் மேலை நாடுகளில் (குறிப்பாக இந்தியாவில்) ப்பயன்படுத்த முயற்சிக்கப்படும் எளிமையான குளிர்சாதனத்தை தயாரித்து காட்சிக்கு வைத்திருந்தனர்.

### குளிர்சாதனம்

நீரையும் சுழலியையும் (fan) கொண்டு மனிதனுக்குப் பாதிப்பில்லாத வகையில் இந்த குளிர்சாதனம் அமைக்கப்பட்டிருந்தது.

இது பரீட்சார்த்தமாக வெற்றியளிப்பதாகவும் இது பற்றி மேலதிக விளக்கம் வேண்டுவோர் தம்முடன் தொடர்புகொண்டு அறியலாம் எனவும் மாணவர்கள் தெரிவித்திருந்தனர்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளால் விளக்கப்பட்ட 'அற்ககோல்' தயாரிக்கும் முறையானது பாடசாலை தேவைக்கும், விஞ்ஞான பாட சம்பந்தமான ஆய்வுகளுக்கும் உதவக்கூடிய தேவையான அற்ககோலை எவ்வாறு கழிவுப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கலாம் என்பதை, தெரிவித்தது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் "விலங்கினப் பல்வகைமை" என்னும் தலைப்பிலான கடல் வாழ் உயிரினங்கள் பற்றிய விளக்கக் காட்சி நாம் அறிந்திராத பல புதிய உயிரினங்களை நமக்குத் தெரியப்படுத்தியது. அசையாமல் கடலில் வாழும் உயிரினங்கள் சிலவற்றை பலரும் ஆர்வத்துடன் பார்த்தனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் 'காட்சியும் கருத்தும்' எனும் நாடகப்பாணியில் அமைந்த சிறுசிறு விஞ்ஞான விளக்கங்கள் அறிவுபூர்வமான விடயங்களை நகைச்சுவையுடன் சிந்திக்கத்தக்க வகையில் வெளிப்படுத்தின.

எரிபொருள்களின் அடர்த்தி, "நீரின அடர்த்தியிலிருந்து எப்படி வேறுபடுகிறது? முட்டை நீரில் மிதப்பதற்கு அதன் அடர்த்திக்கும் நீரின் அடர்த்திக்குமுள்ள வேறுபாடே காரணம் முதலானவற்றைக் குறியீட்டு நாடகங்கள் மூலம் அவர்கள் வெளிப்படுத்தினர்.

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடத்தினர் எளியபொறிமுறை மூலம் இலகுவாக நீர் இறைத்து மனிவலுவை மட்டும் பயன்படுத்தி விவசாயம், வீட்டுத் தோட்டம் முதலானவற்றை செய்யமுடியும் என விளக்கம் கொடுத்தனர்.

### புகைத்தலினால் ஏற்படும் கேடுகள்

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் புகைத்தலினால் ஏற்படும் கேடுகள் பற்றிய விளக்கத்தினை மாதிரிகள் மற்றும் வரைபடங்கள் மூலம் விளக்கினர். அவ்வுறுப்புக்களை (நுரையீரல், ஈரல், இதயம், நாடி, நாளம் முதலானவற்றினை) மிகவும் சிரமப்பட்டு அவர்கள் செய்திருந்தனர்.

கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம் அணுத்துணிக்கைகள் பெறும் ஏற்றங்கள் மற்றும் அதன் பெறுமானங்கள் எவ்வாறு மின்னோட்டத்துடன் தொடர்புபட்டுள்ளன என்பனபோன்ற விளக்கங்களைக் கொடுத்தனர்.

இவற்றுடன் இந்தக் கண்காட்சியில யாழ்.விஞ்ஞானச் சங்கத்துடன் இணைந்து பல அரிய காட்சிப் பொருள்களையும், விளக்கங்களையும் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தினர் வழங்கினர்.

விவசாயத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும் பூச்சி, புழுக்கள் பற்றியும் விவசாயத்திற்கு நன்மை ஏற்படுத்தும் உயிரினங்களின் வகைப்பாடுகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டன.

விவசாயிகள் போதிய விளக்கம் இன்மையாலேயே பயிர்களில் இருந்து உரிய பயன்களை முழுமையாகப் பெறமுடிவதில்லை. ஆகவே இரசாயனப் பொருள்கள் உபயோகம் மற்றும் களைகளின் பெருக்கத்தினைத் தடுத்தல் போன்ற விடயங்களைத் தம்முடன் தொடர்புகொண்டு அவை பற்றிய ஆலோசனைகளைப் பெறுவதன் மூலம் விவசாயிகள் கூடிய நன்மைபெற முடியும் என்று விவசாய பீடத்தினர் குறிப்பிட்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்துடன் விவசாயிகள் எந்த வித தயக்கமும் இன்றி விவசாயம் பற்றிய தமது சிக்கல்கள், பாதிப்புக்கள் பற்றி விரிவுரையாளர்கள், மாணவர்களிடம் தகுந்த அறிவுறுத்தல்களைப் பெறமுடியும் எனக் கூறப்பட்டது.

### பார்வையாளர்களை கவர்ந்தது

விவசாயபீட இறுதி ஆண்டு மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஒரே நேரத்தில் பல தட்டுக்களில் இடியப்பம் பிழிந்து எடுக்கும் இயந்திரம், கச்சான் உடைக்கும் இயந்திரம் ஆகியவை பார்வையாளர்களின் கவனத்தைக் கவர்ந்தன.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட உயிரியல் இரசாயனத் துறையினர் உயிரினங்களைக் 'குளோனிங்' முறையில் உற்பத்தி செய்தல், அதனால் உண்டாகும், நன்மை, தீமை போன்றவற்றினை விளக்கினர்.

**- செந்தூர்ராஜ் -**

குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் மிதிவெடி, பொறிவெடி, கண்ணிவெடி, என்பவற்றினால் கண், கை, கால் முதலான மனித அவயவங்களை இழந்தவர்களுக்கான உறுப்புக்களைக் 'குளோனிங்' முறை மூலமாக உற்பத்தி செய்து பொருத்துவது தொடர்பாக அறிவு பூர்வமாகவும், ஆக்க பூர்வமாகவும் விளக்கப்பட்டது.

அறிவு சார்ந்த விடயங்களின் மூலம் யாழ்.விஞ்ஞானச் சங்கத்தின் நான்காவது விஞ்ஞானக் கண்காட்சி மக்களிடம் வரவேற்பைப் பெற்றிருந்தது. ✱

# எதிரும் புதிருமாக ஜனாதிபதி – பிரதமர் அமெரிக்கா, பிரான்ஸிலும் இதே நிலைதான்

**கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் நாட்டில் நல்லதோ கெட்டதோ ஏதைச் செய்வதாயினும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கருத்து வேறுபாடுகள் - இணக்கமின்மை. ஆனால் எமது நாட்டில் மட்டுமன்றி வேறு நாடுகளிலும் ஜனாதிபதியும் பிரதமரும் அல்லது ஜனாதிபதியும் அடுத்த அதிகாரத்தைக் கொண்ட சபைகளும் பிணக்கின்றி - நல்லாட்சி செய்த - நல்லாட்சி செய்துவரும் - முன்னுதாரணங்களை எடுத்துக் கூறுவதே இந்தக் கட்டுரையாகும். ரஞ்ஜித் ஆனந்த ஜயசிங்கா என்பவரால் எழுதப்பட்டு, ஞாயிறு 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

இலங்கையில் தற்போது ஜனாதிபதி பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்தவராகவும், பிரதமர் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவராகவும் உள்ளனர். 1994 இலும் இவ்வாறான நிலைமை நிலவியது.

ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாய் இருந்தபோதிலும் அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் சிறப்பான அரச நிர்வாகம் இடம்பெற்றுள்ளது. அத்தகைய வரலாற்றின் பின்னணிகளை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

தற்போது இலங்கையில் நடைபெற்றுவரும் அரச நிர்வாக முறை குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அதில் பல குறைபாடுகள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அரசாங்கம் ஒரு கட்சியைச் சார்ந்ததாகவும், நாட்டின் தலைவி பிறிதொரு கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்கும் போது எவ்வாறு ஆட்சியை மேற்கொள்வது எனச் சிலர் வினா எழுப்புகின்றனர். இது எமக்குப் புதிய அனுபவமாகும்.

1948 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டுவரை இந்த நாட்டில் பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறை அனுசரிக்கப்பட்டது. அந்த அரசியல் முறையின்படி, பிரதமமந்திரியின் தலைமையிலான அமைச்சரவையே அதிகாரம் கொண்ட அமைப்பாக விளங்கியது.

1948இல் இருந்து 1972வரை பிரதமமந்திரிக்கு மேலே நாட்டின் தலைவராக மகாதேசாதிபதி என்பவர் பெயரளவில் விளங்கினார். இருப்பினும் 1972 மேமாதம் 22ஆம் திகதி இந்நாடு குடியரசாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி நாட்டின் தலைவரானார். இதுவும் பெயரளவில் மாத்திரமே. அந்த ஜனாதிபதி பெயரளவில் மாத்திரம் நாட்டின் தலைவராக விளங்கியதுடன் சம்பிரதாயபூர்வமான பொறுப்புக்கள் மட்டுமே அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அன்றைய அரசமைப்பின்படி ஜனாதிபதியானவர் பிரதம மந்திரியின் ஆலோசனைகளின்படி செயற்படும் ஒருவராக மட்டுமே விளங்கினார். பொதுவாக ஆட்சியில் அமரும் கட்சி விரும்பும் ஒருவரே ஜனாதிபதியாக நியமிக்கப்படுவது வழக்கம்.

இருப்பினும், 1956இல் எஸ்.டபிளயூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியபோது அப்போதைய மகாதேசாதிபதியான சேர் ஒலிவர் குணதிலகாவைப் பதவியில் இருந்து நீக்கவில்லை.

சேர் ஒலிவர் குணதிலகா ஒரு பிரபல ஐ.தே.கட்சி ஆதரவாளர். இருப்பினும் அவர் பிரதமர் பண்டாரநாயக்கவுடன் ஒத்துழைத்து புரிந்துணர்வுடன் செயற்பட்டார்.

1965இல் டட்லி சேனநாயக்கா ஆட்சிக்கு வந்தபோது முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் நெருங்கிய உறவினரான வில்லியம் கோபல்லாவ மகாதேசாதிபதியாகப் பதவி வகித்தார். இருப்பினும் பிரதமர் டட்லி மகாதேசாதிபதிப் பதவியில் இருந்து வில்லியம் கோபல்லாவை நீக்கவில்லை. அவரும் டட்லியுடன் ஒத்துழைத்து செயலாற்றினார்.

1994இல் ஐ.தே.கட்சி ஆட்சி அதிகாரத்தை இழந்தபோது ஜனாதிபதியாகவிருந்தவர் டி.பி.விஜேதுங்க ஆவார். அவர் நிறைவேற்று அதிகாரங்களைக்கொண்ட நாட்டின் தலைவர். இருப்பினும் அவர் சந்திரிகாவுக்குத் தேர்தல்மூலம் மக்கள் அளித்த ஆதரவை அடுத்து தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் சந்திரிகாவுடன் 4 மாதங்கள் அதாவது தனது பதவிக்காலம் முடியும் வரை பிரச்சினைகள் எதுவுமின்றி ஒத்துப்போனவர். அது இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் புதியதோர் நல்ல அனுபவமாகும்.

இருவேறு அரசியல் கட்சிகள் இணைந்து நாட்டில் நல்லாட்சி புரிந்த யுகம் என அந்தக் காலகட்டத்தைக் குறிப்பிட முடியும்.

ஜனாதிபதி விஜேதுங்காவின் நடவடிக்கைகள் குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் இருந்தபோதிலும் அவர் அனுபவம்மிக்க அரசியல் தலைவராக - நாட்டில் புதிய அரசியல் நெருக்கடிகள் எதுவும் உருவாக இடமளிக்காத விதத்தில் செயற்பட்டார்.

எங்கள் நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப்பெற்ற ஒருவரை பிரதமர் பதவியை ஏற்க அழைப்பு விடுக்கப்பட வேண்டும்.

அதன்படி அப்போது (1994) பொ.ஐ.முன்னணியின் தலைவியாக விளங்கிய சிறிமாவோ பண்டாரநாயக்காவையே பிரதமர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அன்று நிலவிய அரசியல் யதார்த்த நிலைமையை அனுசரித்துச் செயற்பட்ட விஜேதுங்கா, பொ.ஐ.முன்னணியின் செயற்பாடுகளுக்குத் தலைமை வகித்துவந்த சந்திரிகாவுக்கு பிரதமர் பதவியை ஏற்பதற்கு அழைப்புவிடுத்தார். இது எமது அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத சம்பவமாகும்.

தற்போது நிலவுவதும் அவ்வாறான ஓர் அரசியல் நிலைமையே ஆகும்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இன்னும் 4 ஆண்டுகள் ஜனாதிபதியாகப் பதவிவகிக்க மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 6 ஆண்டுகள் ஆட்சிசெய்ய மக்கள் ஆணை வ்ழங்கியுள்ளனர்.

முக்கிய கட்சிகள் இரண்டிற்கும் நீண்டகாலம் ஆட்சிசெய்வதற்கு கிட்டத்தட்ட ஒரே காலகட்டத்தில் மக்கள் ஆணை கிடைத்துள்ளது. நாட்டின் வரலாற்றில் இதுவே முதற்றடவையாகும்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சி அரசுக்கு மக்கள் அளித்த ஆதரவைக் கருத்திற்கொண்டு பிரதமருக்கு வேண்டிய அமைச்சர்களையும் அமைச்சின் செயலாளர்களையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

அரசமைப்பின்பிரகாரம் ஜனாதிபதிதான் விரும்பியவேளையில் அமைச்சர் ஒருவரைப் பதவியில் இருந்து நீக்கவோ புதிய அமைச்சர் ஒருவரை நியமிக்கவோ முடியும். அதேபோல அமைச்சர்களுக்குள்ள பொறுப்புக்களை மாற்றவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. அமைச்சரவைக்குத் தலைமை தாங்குபவரும் ஜனாதிபதியே. எனவேதான் அரசும் ஜனாதிபதியும் தத்தமது அதிகாரங்கள், வரையறைகள் ஆகியனவற்றிற்குள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதை நாடே அவதானித்துக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி தற்போது ஒரு சில கேள்விப்பத்திரங்கள் குறித்தும் அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் சிற்சில கேள்விகளை எழுப்பியுள்ளார். இந்த நிலைமை தொடர்வது நல்லதா? இதை பிரதமர் ரணில் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார் என்பன குறித்து அரசுக்குள் மிகவும் கடுமையான கருத்து நிலவுகிறது. இந்தப் பிரச்சினையை பிரதமர் ரணிலும் ஜனாதிபதி சந்திரிகாவும் எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பதை நாடு அவதானித்துக்கொண்டிருக்கிறது.

இவ்விடயத்தில் பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து நல்ல வழிகாட்டலை நாம் பெறமுடியும். சிறிலங்காவில் பிரான்ஸ் அரசமைப்பை ஒத்த அரசியல் அமைப்பே நடைமுறையில் உள்ளது. எமது வாக்களிக்கும் முறையும் பிரான்ஸில் வாக்களிக்கும் முறையுடன் தொடர்புடையது. எனவே பிரான்ஸில் பிரதான இரு கட்சிகள் ஒரே நேரத்தில் எவ்வாறு ஆட்சி நிர்வாகத்தை மேற்கொண்டன என்பது குறித்து கவனத்திற்கொள்வது பயன் தரத்தக்கதாகும்.

1980களின் ஆரம்பத்தில் பிரான்ஸில் சோஷலிசக் கட்சியின் தலைவர் பிறங்புவா மித்ரோன் அந்நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ஏற்றார். இருப்பினும் அதை அடுத்து நடைபெற்ற அந்நாட்டுப் பொதுத் தேர்தலில் ஜக்விஸ் ஷிராக் தலைமையிலான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி வெற்றிபெற்றது.

இந்த இரு கட்சிகளும் ஒன்றுக்கொன்று எதிரான கொள்கைகளைக் கொண்டிருந்த போதிலும், பல்வேறு அரசியல் பிரச்சினைகளின் மத்தியிலும் மித்ரோன் - ஷிராக் ஆகியோரின் ஆட்சி அதன் ஆயுட்காலம்வரை நீடித்தது.

மித்ரோன் ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெற ஜனாதிபதித் தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ஜக்விஸ் ஷிராக் வெற்றி பெற்றார். ஷிராக் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி தோல்வியடைந்தது. அதேநேரம், மித்ரோனின் சோசலிசக் கட்சியின் புதிய தலைவர் லியொநெல் ஜோசபைன் பிரதமர் ஆனார்.

மித்ரோன் - ஷிராக் இணை போலவே, ஷிராக் - ஜோசபைன் இணையும் பிரச்சினைகள் மத்தியிலும் நாட்டின் நிர்வாகத்தை மேற்கொண்டனர். இருப்பினும் இரு தரப்பினரும் மக்கள் தங்களுக்கு அளித்த ஆணைக்கு மதிப்பளித்துச் செயற்பட்டது பிரான்ஸிய அரசியலில் குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

பிரதான கட்சிகள் இரண்டும் ஆட்சி செய்தபோதிலும், தேசியப்

**தமிழில் : கஜனி**

பிரச்சினைகள் தொடர்பாகவும் நாட்டின் பொதுப் பிரச்சினைகள் தொடர்பாகவும் உடன்பாட்டுடன் செயற்படுவது பிரான்ஸிய அரசியல் மரபு ஆகும். அதையே பிரான்ஸிய மக்களும் விரும்புகின்றனர்.

அமெரிக்காவிலுள்ள நிலைமையும் இதை ஒத்ததே ஆகும். அந்த நாட்டின் நிர்வாகத்தில் மூன்று முக்கிய அமைப்புக்கள் இடம்பெறுகின்றன. இதில் முதலாவது - அமெரிக்காவின் ஜனாதிபதிப் பதவியாகும். இரண்டாவது - காங்கிரஸ் சபை. மூன்றாவது - செனட் சபை. இந்த மூன்று அமைப்புக்களின் ஒப்புதலையும் பெறாது, எந்தவொரு அரசியல் தீர்மானத்தையும் நடைமுறைப்படுத்துவது கடினமாகும்.

சுமார் இருபதாண்டுகளுக்கு முன்னர் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த றொனால்ட் ரேகன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இருப்பினும், ரேகன் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிது காலத்திற்குள் ஜனாதிபதியின் கட்சியான ஜனநாயகக் கட்சி அந்நாட்டுக் காங்கிரஸ் சபையில் பலமிழந்தது. காங்கிரஸில் குடியரசு கட்சி பலம் பெற்றதை அடுத்து ஜனாதிபதி ரேகனால் தனது திட்டங்களை நினைத்தவாறு நிறைவேற்ற முடியவில்லை.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான முடிவுகள் மற்றும் ஒரு சில விடயங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது போன்ற விடயங்களுக்கு காங்கிரஸின் அங்கீகாரம் இன்றியமையாததாகும்.

ரேகனின் நிர்வாகத்தின் போது நட்சத்திரப் போர் (Star War) என்ற திட்டத்தின்கீழ் வான் பாதுகாப்பு தொடர்பான திட்டத்தை அவர் முன்வைத்தபோது காங்கிரஸிலுள்ள எதிர்க்கட்சியினர் அதில் குறுக்கிட்டனர். அதன் காரணமாக அமெரிக்காவின் உள்ளக அதிகாரம் தொடர்பான தீவிர சர்ச்சை உருவானது.

பில் கிளிங்டனின் ஆட்சிக் காலத்திலும் இத்தகைய நிலைமை நிலவியது. பில் கிளிங்டன் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். அவர் காலத்திலும் காங்கிரஸின் குடியரசுக் கட்சியினரின் செல்வாக்கே கையோங்கியிருந்தது. இதனால் கிளிங்டனுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டன. கிளிங்டனின் ஆட்சி முடிவடைவதற்கு முன்னர் ஒரு முறை வரவு - செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்படாததால் பிரச்சினை உருவானது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி கிளிங்டனின் ஒழுக்கம் தொடர்பாக அதாவது மொனிக்கா லெவின்ஸ்கி என்ற பெண்ணுடன் தொடர்புகொண்டிருந்தார் எனக் கூறப்பட்ட சம்பவத்தில் கிளிங்டனுக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது எதிர்க்கட்சியினரின் கையோங்கிய காங்கிரஸே கிளிங்டனைப் பாதுகாத்தது. அதுவே அமெரிக்க ஜனநாயகம்.

கிளிங்டன் எத்தனை பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும், அந்நாட்டு மக்களின் விருப்பத்துக்குரிய தலைவரான கிளிங்டனின் தலைமைக்கு பங்கம் ஏற்படுவது அமெரிக்காவின் கௌரவத்தையே பாதிப்பதாக அமையும் என்பதே காங்கிரஸில் இருந்த பெரும்பான்மை உறுப்பினர்களின் (எதிர்கட்சி உறுப்பினர்களின்) கருத்தாக இருந்தது.

சந்தர்ப்பவசத்தால் கிளிங்டன் மீது குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவரப்பட்டு, அது காங்கிரஸில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அவர் ஜனாதிபதி பதவியை மாத்திரமின்றி சுய கௌரவத்தையும் இழக்க வாய்ப்பிருந்தது.

ஜனாதிபதி கிளிங்டனின் பின்னர் தேர்தெடுக்கப்பட்ட தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் பல காலத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த குடியரசுக் கட்சி ஜனாதிபதியாவார்.

பல காலமாக அமெரிக்க காங்கிரஸில் குடியரசுக் கட்சியினரின் கையே தொடர்ந்து ஓங்கி வந்தது. ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! புஷ் ஜனாதிபதியாகப் பதவியேற்ற வேளையில் காங்கிரஸில் ஜனநாயகக் கட்சியின் கையே ஓங்கியுள்ளது.

இந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் ஒரேயொரு வாக்கு வித்தியாசத்தால் காங்கிரஸிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுக் கட்சி உறுப்பினர் பின்னர் அந்த உறுப்பினர் பதவியில் இருந்து விலகியதே ஆகும். ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷிற்கும், முன்னாள் ஜனாதிபதிகளான ரேகன் மற்றும் கிளிங்டனைப் போலவே காங்கிரஸின் ஒத்துழைப்புடனேயே அதாவது எதிர்க்கட்சி ஆதிக்கம் செலுத்தும் காங்கிரஸின் ஒத்துழைப்புடனேயே நாட்டின் நிர்வாகத்தை மேற்கொள்ள நேர்ந்துள்ளது.

இவ்வாறான நிலைமையில் அமெரிக்க ஜனாதிபதிகளுக்குள்ள அளப்பரிய அதிகாரங்கள் காங்கிரஸால் கட்டுப்படுத்தப்படுகிறது. குறிப்பாக வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா தோல்வியைத் தழுவிய பின்னர் உருவாக்கப்பட்ட சட்டத்தின்படி வெளிநாடு ஒன்றுடன் அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட முடிவுசெய்யுமாயின் அது தொடர்பாகத் தனியாகத் தீர்மானிப்பதற்கு ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. காங்கிரஸ் மற்றும் செனட் சபை ஆகியன அனுமதித்தால் மாத்திரமே அமெரிக்க இராணுவத்தை வெளிநாட்டு யுத்தத்தில் ஈடுபடுத்த முடியும்.

அமெரிக்க ஜனாதிபதி, காங்கிரஸ் மற்றும் செனட் ஆகியவற்றின் ஒருமித்த உடன்பாட்டிற்கமையவே அண்மையில் அமெரிக்கப் படைகள் ஆப்கானுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

வருடாவருடம் தேர்தல் நடைபெறும் பிரச்சினைக்குரிய அரசியல் சூழ்நிலையைப் பொறுத்துக் கொண்டிருக்க சமூகம் தயாராயில்லை. மக்களுக்குத் தேவையான உயர்மட்ட அபிவிருத்தி வேகத்தைக் கொண்ட நாடுகளை அரசியல்வாதிகள் கட்டி எழுப்புவதைக் காணமுடிகிறது. எழுந்தமானமான மக்களின் எண்ணங்களுக்கு ஏற்ப சதிராட எந்த ஒரு ஆட்சியாளருக்கும் இடமில்லை. அரசியல்வாதிகள் தவறாகச் செயற்பட்டால் அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு அவர்களை நிராகரிக்கவும் வழியுண்டு. அரசியல் அதிகாரத்தை உருவாக்குவது மக்களே என்பதை அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளவேண்டும். ★


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 07 - 05 - 1920



உதிர்வு 22 - 01 - 2002

### திருமதி சின்னத்தங்கம் செல்லையா

22. 01. 2002 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குலவிளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இன்று (21. 02. 2002) வியாழக்கிழமை பகல் 10. 00 மணியளவில்* அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*ஆசிரியமணி ஆறுமுகம் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (963)



## கண்ணீர் அஞ்சலி

உடுவில் கமநல கேந்திர நிலைய கணக்கியல் லிகிதர்
சு.கலைச்செல்வி அவர்களின் பாசமிகு தந்தையார்

### நாகலிங்கம் சுப்பிரமணியம்

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உடுவில் கமநல கேந்திர நிலையம்,*
*உடுவில் கமநல கேந்திர நிலைய*
*விவசாய சம்மேளனங்களின் சமாசம்.*

(964)

அடுத்த மாதம் 15ஆம் திகதிமுதல்

# பிதிர்க்கடன் செய்வதற்கு கீரிமலைக்குச் செல்லலாம்

யாழ்ப்பாணம்,பெப்.21

கீரிமலையில் பிதிர்க்கடன் செய்தல், அஸ்தி கரைத்தல் ஆகிய சமயக் கிரியைகள் செய்வதற்கு அடுத்த மாதம் 15ஆம் திகதிமுதல் மீண்டும் பொதுமக்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

தினமும் காலை 10 மணிக்கு முன்னர் துவிச்சக்கரவண்டி தவிர்ந்த ஏனைய வாகனங்களில் வருபவர்கள் மட்டும் தெல்லிப்பழையூடாக கீரிமலை செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் -

பத்து மணிக்குப் பின்னர் வரும் எவரும் கீரிமலை செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் -

வலி.வடக்கு பிரதேச செயலர் ப.திலகநாயகம் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 27ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 13ஆம் திகதி வரை ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. இந்த பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ள அடியவர்களுக்கு விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தினமும் காலை 8 மணிக்கு தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து பஸ்களில் அடியவர்கள் ஆலயத்துக்கு அழைத்துச்செல்லப்படுவர்.

வலி.வடக்கு பிரதேச செயலர், யாழ்.மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் விஜேசூரியவுடன் தொடர்புகொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (உ-7)

## ROTARY'S GUEST SPEAKERS' DAY

The Rotary Club of Jaffna cordially invites all enthusiasts to attend this meeting to be held today (Thursday) 21-02-2002 at No. 12, Sivagurunathar Lane, Jaffna at 4.30 p.m.

*Guest Speakers:*

Rotarian Janaka Edirisinghe
(Past President of the Rotary Club of Colombo west)

Subject: **Peace Through Rotary.**

Rotarian Martin De Silva
(Past President of the Rotary Club of Kurunegala)

Subject: **Community Service**

*Sivagurunathar Lane,*
*Jaffna.*

**Rotary Club of Jaffna.**

(C/20833)

## கண்ணீர் அஞ்சலி

நாகர்கோயிலைப் பிறப்பிடமாகவும் கெருடாவிலைப்
புகுந்த இடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட
சங்கரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (கனகசிங்கம்),
ச.அமிர்தலிங்கம் (துரைசிங்கம் - துன்னாலை)
ஆகியோரின் அன்புத் தாயார்

### திருமதி சங்கரப்பிள்ளை கண்ணாத்தை

அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைவதுடன், அன்னாரின் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*"கனகம்மா இல்லம்",*
*கரவெட்டி.*

திரு.சி.துரைராசா
குடும்பம்.

(C/20828)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களப் பதவிநிலை
உத்தியோகத்தர் திரு.சு.வேலாயுதபிள்ளை அவர்களின் மைத்துனரும்
உடுவில் கமநல கேந்திர நிலைய எழுதுவினைஞர்
செல்வி சு.கலைச்செல்வி அவர்களின் அன்புத் தந்தையாருமான

### நாகலிங்கம் சுப்பிரமணியம்

அவர்கள் 18.02.2002 இயற்கை எய்தியதையிட்டு துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தாரின் துன்ப துயரங்களில் நாமும் பங்கேற்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.
பணிப்பாளரும், பணியாளர்களும்,
கமத்தொழில் காப்புறுதிச் சபை, யாழ்ப்பாணம்.
பெரும்பாக உத்தியோகத்தரும், ஊழியர்களும்,
கமநல கேந்திர நிலையம், நல்லூர்.

(954)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத் தலைவர்
*திரு.செ. சுப்பிரமணியம்*
அவர்களின் அன்புத் தந்தையார்

### அருணாசலம் செல்லத்துரை

அவர்களின் மறைவினையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*திருமகள் சோதி வீதி,*
*கரவெட்டி.*

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
பொதுச்சபைப் பிரதிநிதிகளும்,
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்.

(C/20827)

## திருவுருவப்படம் திரை நீக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.21

அச்சுவேலி மத்திய கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சகுந்தலாதேவி கனகராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொள்ளும் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா திருவுருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைப்பார். (உ-7)

## சாரணர் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.21

உலக சாரணர் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் நடத்தும் விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாவட்ட சாரணர் ஆணையாளர் ந.சௌந்தரராஜன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா, உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.சண்முகநாதன், செயற்குழுத் தலைவர் த.நா.போஜன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

சிறப்பு நிகழ்ச்சிகளாக குருளைச் சாரணர்களும், சாரணர்களும் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (உ-7)

## இந்து நாகரிகம் முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.21

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றும் மாணவர்களுக்காக யாழ். சைவ பரிபாலனசபை நடத்தும் முன்னோடிப பரீட்சை இம்மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள சுமார் 60 பரீட்சை நிலையங்களில் இந்த முன்னோடிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள், சுட்டெண்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (உ-7)

லஷ்சுமி இணுவில்
முரளி, தேவயானி, வடிவேலு
நடிக்க
கண்ணுக்கு கண்ணாக
(ரீலஸ்)
காட்சிகள்: 10.30, 2.30 (பழைய நேரம்)
(962)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த் (இருவேடம்), சௌந்தர்யா,
வடிவேல், வடிவுக்கரசி
நடிக்க
தவசி
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)
(946)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன்
நடித்த
பிரியாத வரம் வேண்டும்
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5 (பு.நே.)
24ஆம் திகதிமுதல் காசி
(C/20766)

நிறஞ்சனாஸ் சங்கானை
விவேக், வடிவேலு, குஷ்பு நடித்த
விரலுக்கேத்த வீக்கம்
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே)
(C/20767)

## மணிவதனன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயம்

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகத்தினால்
நடத்தப்படும்
அழைக்கப்பட்ட கழக அணிகளுக்கிடையிலான
7 பேர் பன்னிரெண்டு (12) ஓவர்களைக் கொண்ட
(தோல்பந்து) கிறிக்கற் சுற்றுப் போட்டி-2002

அழைக்கப்படும் கழகங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படும்.

*விண்ணப்ப முடிவு திகதி* : ***24.02.2002***

*அணி ஒழுங்கு தெரிவு* : ***25.02.2002***

போட்டிகள் யாவும் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

*சுற்றுப்போட்டிக் குழு சார்பாக,*

20-02-2002

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம்.

(C/20832)

## கண்ணீர் அஞ்சலி

யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர்
திரு.செ.சுப்ரமணியம் அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் அருணாசலம் செல்லத்துரை

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*யா/கமலாசனி வித்தியாலயம்,*
*மட்டுவில், சாவகச்சேரி.*

உபஅதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபையினா.

(960)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பவானி பரமு

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த திருமதி பவானி பரமு அவர்கள் 18.02.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பரமு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசம்மா, செல்லத்துரை, சின்னத்துரை (ஓய்வு), சிவனேசன் (சட்டத்தரணி), சிவராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஷ்பராணி, கலாநிதி புஷ்பரட்ணம் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), சித்திரா, இரட்நேசன் (லண்டன்), காஞ்சனா, குகநேசன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அருமைத் தாயாரும், பரமநாதன் நளினி (ஆசிரியை), சிவசுப்பிரமணியம் (யாழ். பல்கலைக்கழகம்), தனேஸ்வரன் (இரசாயனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), வதனி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2002) வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கிலுள்ள மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமாரசாமி வீதி,*
*புத்தூர் கிழக்கு, புத்தூர்.*

தகவல்:
ப.புஷ்பரட்ணம் (மகன்)

(957)

## அருணாசலம் செல்லத்துரை

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும்கொண்ட அருணாசலம் செல்லத்துரை நேற்று (20.02.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், சின்னையா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, வைரவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம் (அதிபர் - யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், தலைவர் - சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்), சிவஞானம் (அதிபர் - யா/கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம்), யோகநாதன் கணேசநாதன், திருச்செல்வநாதன் (கனடா), நவிலகுமாரன் (கனடா), மதிவதனசுந்தரி, யோகம்மா, தங்கேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும் இந்திராணி, சுதர்சினி, சிவதவநாயகி, காலஞ்சென்ற Dr.தவலெட்சுமி, சாரதாதேவி, காலஞ்சென்ற சண்முகதாஸன், சிவபாதசுந்தரம் (வருமானவரி உத்தியோகத்தர், பிரதேச சபை - சாவகச்சேரி), தர்மசீலன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கீதா, மணிவண்ணன், தீபனா, தர்ஷிகா, வித்தகன், ஆர்த்திகா, சாரங்கா, தனுஷன், கஸ்தூரி, சர்மினி, வசந்தா, பானுஷா, பிருந்தா, தர்ஷன், குகன், டயானா, யதுஷன், தீபிகா, மதுஷன், நிலானி, அகிலன், சிறி அருட்செல்வன், லமனி, யோதீபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.02.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் வடக்கு ஆயத்தடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பின்வீதி,*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
செ.சுப்பிரமணியம்
(மகன்)

(961)

## திருமதி தம்பிப்பிள்ளை சின்னம்மா

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி தம்பிப்பிள்ளை சின்னம்மா நேற்று (20.02.2002) புதன்கிழமை காலமானார்.

இவர் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், வெண்கமலதேவி, குகானந்ததேவி, விமலாதேவி, கமலாதேவி (B.S.M.S.) ஆகியோரின் தாயாரும், முருகேசு (பிரதம லிகிதர், பிரதேச சபை தலைமை அலுவலகம் - நீர்வேலி), சண்முகம் (வவுனியா) ஆகியோரின் மாமியும் தர்சினி (தமிழ் சிறப்புக்கலை 3ஆம் வருட மாணவி), பிரதீப் (2002 கணிதப் பிரிவு மாணவன், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), தர்சிகா (வேம்படி மகளிர் கல்லூரி ஆண்டு 10), தர்மிலா (வேம்படி மகளிர் கல்லூரி ஆண்டு 9) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
தம்பிப்பிள்ளை
(கணவர்)

(958)



மட்டக்களப்பு பொங்கு தமிழ் நிகழ்வின் ஆரம்பத்தில் இடம்பெற்ற ஊர்வலத்தில் கீழைத்தேய பாண்ட் அணியை முதற் படத்திலும் சுரேஷ் பிரேமச்சந்திரன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# பொதுமக்கள் இல்லாமல் தேர்தலா? ஜே.வி.பி. வீணாகப் பீதியடையக் கூடாது

## சபையில் இரா.சம்பந்தன் பேச்சு

கொழும்பு,பெப்.21

பொதுமக்களே இல்லாத சூனியப பிரதேசத்தில் எப்படித் தேர்தலை நடத்த முடியும்? வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களின் உண்மையானநிலையை யதார்த்தமாகச் சிந்திக்கவேண்டும். ஜே.வி.பியினர் வீணாகப் பீதி அடையக்கூடாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் சட்டத் திருத்தம் தொடர்பான விவாதத்தில் பங்குபற்றி அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இச்சட்டமூலம், புலிகளின் சட்டமூலம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சாயம் பூசமுனைவது ஆச்சரியமாக இருக்கின்றது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் உண்மை நிலையை அவர்கள் உணரவேண்டும்.

வன்னி மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்திலும், வடக்கிலும் பல உள்ளூராட்சிச் சபைப் பிரதேசங்களில் மக்களே இல்லை. சாவகச்சேரி, குச்சவெளி போன்ற இடங்கள் மயான பூமியாகக் காட்சி அளிக்கின்றன.

வாக்களிக்க ஆள்கள் இல்லாத போது யார் வாக்களிப்பது? பல லட்சம் பேர் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்களுடைய ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

இன்றும்கூட பொதுமக்களின் பாதுகாப்புக்கு உறுதியான உத்தரவாதம் இல்லை. இந்த நிலையில் பொலீஸாரும், தேர்தல் அதிகாரிகளும் எப்படித் தமது கடமைகளைச் செய்ய முடியும்.

முன்னைய அரசும், ஜே.வி.பியினரும்கூட இராணுவ நடவடிக்கையின் மூலம் தீர்வுகாணமுடியாது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதுவரை ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகள் இன்று ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து செயற்பட விரும்புகின்றனர். இந்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஜே.வி.பியினரும் முன்னர் ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தியவர்கள். இப்பொழுது நாடாளுமன்றத்தில் இருக்கவில்லையா? சமாதான முயற்சிக்கு ஜே.வி.பியினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அதைவிடுத்து தென் பகுதியில் மற்றோர் இரத்தக் களரிக்குத் தூபம் போடக்கூடாது.

- இவ்வாறு இரா.சம்பந்தன் கூறினார்.

# ரத்வத்தைக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,பெப்.21

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்டுள்ளார்.

அனுருத்த ரத்வத்த கைதுசெய்யப்பட்டார் என்ற செய்தி கிடைத்ததும் தொலைபேசி மூலம் பிரதமருடன் தொடர்புகொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரத்வத்தைக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் -

அவர் மீதான விசாரணையின் போது சட்டத்தரணிகள் அவருடன் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கவேண்டும் என்றும் - கேட்டுக்கொண்டார்.

இதனை அடுத்து -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுடன் தொடர்புகொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அவரைப் பணித்தார்.

அனுருத்த ரத்வத்தவுக்கு இது வரை வழங்கப்பட்ட அதிரடிப்படையினரின் பாதுகாப்பும் தற்போது விலக்கப்பட்டுள்ளது.

(உ-7)

# மோதல் தவிர்ப்பு நீடிக்கும்

கொழும்பு,பெப்.21

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு (24ஆம் திகதிக்கு) முன்னர் அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்தாவதற்கு தாமதமானால் அன்றைய தினம் நள்ளிரவுடன் மேலும் ஒரு மாதத்துக்கு மோதல் தவிர்ப்பை அரசு நீடிக்கும்.

- வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ நேற்று மாலை தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

நிரந்தர யுத்தநிறுத்தம் வரும்வரை மோதல் தவிர்ப்பு நீடிக்கும் என்றார் அவர்.

# ரணில் நாளை வவுனியாவுக்கு!

வவுனியா,பெப்.21

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை வவுனியா வருகின்றார்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கடந்த 16ஆம் திகதி கண்டி வீதி ஊடாக திறக்கப்பட்டுள்ள பாதையில் பொதுமக்கள பயணம் செய்வதை பிரதமர் பார்வையிடுவார்.

அதன்பின்னர் வவுனியா இராணுவ முகாமில் நடக்கும் மாநாட்டில் அவர் பங்குபற்றுவார்.

வவுனியாவில் நடைமுறையில உள்ள 'பாஸ்' நடைமுறையை நீக்குவது குறித்தும் -

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான கண்டி வீதிப் பாதையைத் திறப்பதற்கு தடையாக உள்ள விடயங்கள் குறித்தும் -

இந்த மாநாட்டில் பிரதமர் ஆராயவிருக்கின்றார்.

யாழ்ப்பாணம் வரை பாதையைத் திறப்பதற்கு வசதியாக எழுதுமட்டுவாழ் படை முகாமை அகற்றப் படை உயர் அதிகாரிகள் விருப்பம் தெரிவிக்கவில்லை என்றும் -

இது விடயம் குறித்தும் பிரதமர் அங்கு படை அதிகாரிகளுடன் ஆராயவிருக்கிறார் என்றும் - தெரியவருகின்றது.

(உ-3)

# ஜெனரல் அனுருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை விசேட ஹெலிக்கொப்டரில் குற்றப்புலனாய்வுப் பொலீஸாரினால் கொழும்பில் இருந்து தெல்தெனியவுக்குக் கூட்டிச் செல்லப்பட்டார்.

குற்றப்புலனாய்வுப் பொலீஸ் பிரிவு அத்தியட்சகர் சிசிர மெண்டிஸ், ரத்வத்தையின் சட்ட ஆலோசகரான ஜனாதிபதி சட்டத்தரணி அனில் ஒபயசேகரா ஆகியோரும் ஹெலியில் அவருடன் பயணித்தனர். ஹெலிகொப்டரில் இருந்து இறங்கிய ரத்வத்தை பொலீஸ் வாகனம் மூலம் தெல்தெனிய நீதிமன்றத்துக்குக் கூட்டிச்செல்லப்பட்டார். அவரது பாதுகாப்பை ஒட்டி ஏழு பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த நூறுக்கும் மேற்பட்ட பொலீஸார் ஆயுதங்கள் சகிதம் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். பெருந்திரளான பொதுமக்களும் நீதிமன்றம் அருகே திரண்டிருந்தனர்.

தெல்தெனிய நீதிமன்றத்தில் நீதிவானின் அறையில் நீதிவான் இனோகா ரணசிங்க முன்னிலையில் அவர் ஆஜர் செய்யப்பட்டார்.

அச்சமயம் நீதிமன்றப் பகுதியில் பத்திரிகையாளர்களும் திரண்டிருந்தனர்.

மடவளையில் பலரைக் கொலை செய்யச் சதிசெய்தமை, கொலைகளுக்குத் தூண்டுதலாக இருந்தமை, சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் ரத்வத்தை மீது சுமத்தப்பட்டுள்ளன.

சந்தேக நபரான அனுருத்தவை மார்ச் 4ஆம் திகதிவரை வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அதனையடுத்து அவர் மீண்டும் பொலீஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டு ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்குக் கூட்டி வரப்பட்டார்.

அப்போது தான் சுகவீனமுற்றிருப்பதாக ரத்வத்தை தெரிவித்தார். அதையடுத்து அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆஸ்பத்திரியில் சிறைச்சாலை அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரை ஸ்ரீஜயவர்த்தனபுர ஆஸ்பத்திரிக்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது.

(உ-3-4)

# மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வை முன்னிட்டு மட்டு நகரமெங்கும் சிவப்பு, மஞ்சல் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. இடையிடையே பதாகைகளும் காணப்பட்டன.

காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் விடுத்த அழைப்பை அடுத்து பெரும் தொகையான முஸ்லிம் மக்களும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதற்கிடையில் -

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து மட்டுநகருக்கு வருகைதரவிருந்த பொதுமக்கள் வவுணதீவு சோதனைச்சாவடியில் வைத்துப் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டார்கள் எனக் கூறப்பட்டது. (உ-7-4)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
ரகுவரன், பிரகாஸ்ராஜ், மீனா நடித்த
தயா
அல்டி எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம். (C/20830)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
பிரகாஸ்ராஜ், மீனா நடித்த
★ தயா
பிரதீகள் உடன் பெறலாம்.
விஜயசாந்தியின்
★ சி.பி.சி.ஐ.டி.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/20831)

அழிவுகளிலும்
சிதைவுகளிலும்
இருந்து.....

A Lecture & Discussion
on

**Human Disaster Management**

by
**Dr. David N.Ratnavale**
*Consultant*
*Human Disaster Management Council*

22.02.2002
Friday
3.00- 5.00 p.m.

Library Auditorium
University of Jaffna

**All are Welcome**

Shanthiham &
Department of Psychiatry

# மரண அறிவித்தல்கள்

## சுப்பர் அப்புத்துரை (விதானை)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் அப்புத்துரை கடந்த (15.02.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் தங்கரத்தினத்தின் பாசமிகு கணவரும் அகிலன் (சுவிஸ்), அகல்யா (சுவிஸ்), அனிமொழி (முகாமைக் கற்கைகள்துறை, முதலாம் வருட மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாகரனின் (சுவிஸ்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2002) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகப் பிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
பூ.நவரத்தினம்
(சகலன் - காந்தி)
(940)

## செல்வி பகீரதி தில்லையம்பலம்

விக்னேஸ்வரக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கைச் சேர்ந்த செல்வி பகீரதி தில்லையம்பலம் 18.02.2002 திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் வீ.தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - திருமதி தங்கமுத்து ஆகியோரின் அருமைப் புத்திரியும் பகீரதன், பாரதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி சிவாஜினி பகீரதன் அவர்களின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.02.2002 செவ்வாய்க்கிழமை கரவெட்டியில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விக்னேஸ்வரக் கல்லூரி வீதி,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
ச.விநாயகமூர்த்தி
(சிறிய தந்தை)
(934)

# கண்ணீர் அஞ்சலி



## சுப்பர் அப்புத்துரை (விதானை)

அவர்கள் இயற்கையெய்திவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*சகலன்மார்கள்:*
நவரத்தினம் குடும்பம் (காந்தி),
திருச்செல்வம் குடும்பம் (தவம்).

*"துஷி இல்லம்"*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*
(941)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.